பொதுசன நூலகம்

விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 தை 11 வெள்ளிக்கிழமை (25.01.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 037




# புதைகுழியிலிருந்து 16 சடலங்கள் ஹெப்பிட்டிக்கொல்லாவவில் மீட்பு

## அனைத்தும் ஆண்களினுடையவை

(அநுராதபுரம்)

அநுராதபுரம் மாவட்டம் ஹெப்பிட்டிக்கொல்லாவ கொரவப்பொத்தானப் பகுதியில் உள்ள கிரிபத் கொட என்ற இடத்தில் இரண்டு புதைகுழிகளிலிருந்து 16 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் ஆண்களினுடையவை என்றும் அச்சடலங்களில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (10 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நகரின் பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு மாநகரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இதற்கு முப்படையினர், பொலிஸார், விசேட அதிரடிப் படையினர், சிவில் பாதுகாப்புப் படையினர் ஆகியோர் கூட்டாக விசேட நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் இவர்கள் தத்தமது பிரிவுகளை வகுத்து சோதனை., தேடுதல் மற்றும் கிடைக்கப் பெறும் புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் சில பகுதிகளை கவனத்தில் எடுத்து விசேட தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடுவர் என அவர் தெரிவிததார். (எ-2)

## பயணிகள் கப்பல் சேவை திங்கள் முதல் ஆரம்பம்

(திருகோணமலை)

திருகோணமலை–காங்கேசன்துறைக்கிடையிலான பயணிகள் கப்பல் சேவை எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகுமென திருகோணமலை அரசாங்க அதிபர் ஜெனரல் ஆர்.டி.சில்வா தெரிவித்தார்.

இதன்போது திருகோணமலையிலுள்ள தபால் பொதிகள் திங்கட்கிழமை யாழிற்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை எதிர்வரும் 28ஆம் திகதி கப்பல் சேவை ஆரம்பமாகும் என்றும் கப்பலுக்கான பற்றுச் சீட்டினை பெற்றவர்கள் அதனை எதிர்வரும் 31ஆம் திகதிவரை பயன்படுத்த முடியும் என்றும் யாழ்.பிரிகேட் கொமாண்டர் ஆர். குலதுங்க தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இதேவேளை கப்பல் சேவை ஆரம்பமாவது குறித்த தகவல்கள் எவையும் யாழ். அரச அதிபருக்கு அறிவிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது. (எ-1)

# யாழ்ப்பாண சிவில் நிர்வாகத்தை பொலிஸிடம் ஒப்படைக்க நடவடிக்கை

## யாழ்ப்பாண பிரிகேடியர் குலதுங்க தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண சிவில் நிர்வாகத்தை பொலிஸாரிடம் கையளிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக யாழ்ப்பாணப் பிரிகேட் கொமாண்டர் ஆர்.குலதுங்க தெரிவித்தார்.

யாழ்ப்பாண நிலைமைகள் தொடர்பாக யாழ்ப்பாண பிரிகேட் கொமாண்டர் ஆர்.குலதுங்க தலைமையில் நேற்று மாலை 3.30 மணியளவில் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது. இக்கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் சிவசுவாமி, யாழ்ப்பாணப் பொலிஸ் அதிகாரி, யாழ்.நகரப் பாடசாலை அதிபர்கள், கிராம அலுவலர்கள், வர்த்தக சம் மேளனப் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதில் பொருள்கள் வழங்கல் மற்றும் அவற்றின் விலைகள், மீனவர் பிரச்சினைகள், மின்பாவனை, சுகாதாரம், போக்குவரத்து, கல்வி உட்பட பல விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

### பொருள் விநியோகம்

பொருள்களை ஏற்றி, இறக்கப்படும்போது அவை காணாமல் போவது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாக பிரிகேடியர் ஆர்.குலதுங்க உறுதியளித்துள்ளார். கறுப்புச் சந்தைகளை இல்லாது ஒழிப்பதற்கு விலை கட்டுப்பாட்டு அதிகாரிகள், பொலிஸாரின் ஒத்துழைப்புடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்தார்.

, சில இடங்களில் இராணுவ நலன்புரிக் கடைகள் திறக்கப்பட்டு கட்டுப்பாட்டு விலையில் பொருள்களை விற்க நடவடிக்கை எடுக்கப்படும். இதன்மூலம் சாதாரண மக்களும் நன்மையடைவர் என்றார். விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படாது விட்டால் பொருள் விநியோகம் தொடர்பான சில நடவடிக்கைகளை இராணுவம் பொறுப்பேற்று நடத்த வேண்டி ஏற்படும் என்றார்.

யாழ்ப்பாணத்து சிவில் நிர்வாகம் விரைவில் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படும். அதற் காகப் பொலிஸ் அதிகாரியின் அலுவலகமும் 20 ஆண்டுகளின் பின் திறந்து வைக்கப்பட் டுள்ளதாகவும் அவர் கூறினார்.

### மருத்துவம்

தேவையான இடங்களில் இராணுவத் தினரால் நடமாடும் மருத்துவ முகாம் நடத்தப்படும். கிராம அலுவலர்களின் வேண்டுகோளின்படி பாசையூர், (10 ஆம் பக்கம் பார்க்க)

## வயோதிபர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

கொடிகாமத்தில் வயோதிபர் ஒருவர் இனந் தெரியாத ஆயுததாரிகளால் நேற்று சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். சம்பவத்தில் வரணியை சேர்ந்த சுப்பிரமணியம் நடேசபிள்ளை(வயது 61) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

இவரது சடலத்தை கொடிகாமம் பொலிஸார் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். (எ-10)

## யால சரணாலயத்தை மூடுவதற்குத் திட்டம்?

(கொழும்பு)

யால சரணாலயத்தை மூடிவிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இப் பகுதிகளுக்கு வரும் உல்லாசப் பிரயாணிகளின் வருகையில் ஏற்பட்ட வீழ்ச்சியும் உல்லாசப் பயணிகளின் பாதுகாப்புக் காரணங்களும் இந்தத் தீர்மானத்திற்குக் காரணங்கள் என்றும் கூறப்படுகின்றது.

சரணாலயப் பகுதியில் அண்மைக் காலமாக மோதல் சம்பவங்கள் இடம்பெற்று வரும் நிலையில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-2)

# வடக்கு இடைக்கால ஆலோசனை சபைக்கான உறுப்பினர்களை ஜனாதிபதியே நியமிப்பார்

## அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வகட்சி ஆலோனைக் குழுவின் தலைவரும் அமைச்சருமான திஸ்ஸ விதாரணவினால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ள யோசனைகளின் பிரகாரம் 13-வது திருத்தச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள சகல அதிகாரங்களும் ஒன்றுபட்ட இலங்கைக்குள் சகல மாகாணங்களிலும் நடைமுறைப்படுத்தப்படும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் அதிகாரங்களைப் பகிர்வதன் மூலமாக சகல இன மக்களுக்கும் சகல உரிமைகளும் சமமான முறையில் பகிர்ந்தளிக்கப்படும். கிழக்கில் மாகாண சபையை ஏற்படுத்துவதன் மூலமாகவும் வடக்கில் மாகாண சபையை ஏற்படுத்துவதற்கான சூழ்நிலை உருவாக்கப்படுகின்ற வகையில் அங்கு தற்காலிக ஆலோசனை சபை ஒன்று நிறுவப்படும் என்றும் அறிவித்துள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன ,சரத் அமுனுகம ஆகியோர் மேற்கண்ட கருத்தைத் தெரிவித்தனர்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பாவும் கலந்து கொண்டார். அங்கு அவர்கள் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த இரண்டு வருடத்திற்குள் சமாதானத்தை ஏற்படுத்துவதற்குப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

ஒன்றரை வருடங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பித்தது மட்டுமல்லாது, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான யோசனைகளைத் தயாரிப்பதற்காக சர்வகட்சி ஆலோசனைக் குழு (10 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே

தரிசனம்

சிறப்புப் பார்வை

## தமிழக மீனவர்களை மீட்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கருணாநிதி உத்தரவு

(சென்னை)

கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கை கடற்படையினரால் கைது செய்யப் பட்ட 12 தமிழக மீனவர்களை விடுவிப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க முதல் அமைச்சர் கருணாநிதி உத்தரவிட்டுள்ளார்.

இலங்கையில் விடுதலைப்புலிகளுக்கும்



இலங்கை இரா ணுவத்துக்கும் கடும் சண்டை மூண்டுள்ளது. கடல் பகுதியிலும் அவ் வப்போது கடல் புலிகளுக்கும் இலங்கை கடற் படையினருக்கும் மோதல் ஏற்பட்டு வருகிறது. விடு தலைப்புலிகளுக்கு ஆயுதங்கள், எரிபொருள் உள்ளிட்ட அத்தியா வசிய பொருட்கள் கடல் வழியாக கடத்தப்படு கின்றன. இதனைத் தடுப்பதற்காக இலங்கை கடற்படை தீவிர நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகிறது.

கடலில் மீன் பிடிக்கச் செல்லும் தமிழக மீன வர்கள் சர்வதேச எல்லைக்கோட்டினை தங் களை அறியாமல் தாண்டிவிடும்போது இலங்கை கடற்படையினரால் அடிக்கடி கைது செய்யப்படு கிறார்கள். தமிழக மீனவர்கள் சிலர் மூலமாக விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்கள் கடத்தப் படுவதாகவும் இலங்கை கடற்படை குற்றம் சாட்டி வருகிறது.

இந்நிலையில் ராமேஸ்வரம் மீன்பிடித் துறை முகத்தில் இருந்து 2 நாட்களுக்கு முன்பு 599 விசைப்படகுகளில் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களில் 12 பேர் கரைக்குத் திரும்ப வில்லை .

அவர்கள் கடலில் சர்வதேச எல்லைக் கோட்டை தாண்டியதால் கச்சதீவு அருகே கைது செய்யப்பட்ட தகவல் இலங்கை தூதரகம் மூலம் தமிழக மீன்துறைக்கு தெரியவந்தது.

தொடர்ந்து இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 12 தமிழக மீனவர்களை மீட்க உடனடி நடவடிக்கை எடுக்கும்படி தமிழக் அதி காரிகளுக்கு முதல் அமைச்சர் கருணாநிதி உத் தரவிட்டார்.

இதன்பிறது இலங்கையில் உள்ள இந்திய துணைத்தூதரை தமிழக அதி காரிகள் தொடர்பு கொண்டு கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கும்படி வலியுறுத் தியுள்ளனர். (அ-5)

## அரிசியை அத்தியாவசியப் பொருளாக அரசாங்கம் பிரகடனம்

(கொழும்பு)

அரிசியை அத்தியாவசியப் பொருளாக அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது. 2003ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க நுகர் வோர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்ட விதி களுக்கு அமைவாகவே இப்பிரகடனம் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சு அறிவித்துள்ளது. இது தொடர்பான வர்த்தகமானி அறிவித்தலையும் அமைச்சு விடுத்துள்ளது.

இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தாவது,

அரிசியின் விலையை 100 ரூபாவால் அதிகரிக்கச் செய்ததன் மூலம் அரசாங்கத்தை அசௌகரியத்திற்குள் தள்ளிவிட்டு தெற்கில் ஸ்திரமில்லாத தன்மையை தோற்றுவித்து பயங்கரவாதத்திற்கு ஒத்துழைப்பை வழங்கும் அரசியல் சதித் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வரு கிறது.

இந்த அரசியல் சதித்திட்டத்தை தோல்வி யடையச் செய்வதற்கான சட்டரீதியான நடவடிக் கைகளை மேற்கொள்ளும் நோக்கி லேயே அரிசியை அத்தியாவசியப் பொருளாக பிர கடனப்படுத்தும் விசேட வர்த்தமானி அறி வித்தல் இன்று வெளியிடப்பட்டது.

இதன் மூலம் நுகர்வோர் பாதுகாப்பு சபைக்கு கிடைக்கும் விசேட அதிகாரங்களின் கீழ் அரிசியை தொகையாக பதுக்கி வைத்தல், தேவையற்ற விதத்தில் களஞ்சியப்படுத்தல், தம் மிடமிருக்கும் தொகையை மறைத்தல், விற் பனையை தவிர்த்தல், பொய்யான தகவல் களை வழங்கல் போன்ற விடயங்கள் தடை செய் யப்பட்டுள்ளன.

இனிவரும் நாட்களில் மக்களின் பொது நன்மை கருதி நுகர்வோர் பாதுகாப்பு சட்ட விதி களை நடைமுறைப்படுத்தவும் நுகர்வோர் பாது காப்பு அதிகார சபைக்கு அமைச்சர் பந்துல குண வர்த்தன ஆலோசனைகளை வழங் கியுள்ளார். (அ-5)

## தை மாத பிறப்பே தமிழர் புத்தாண்டு தமிழக சட்ட சபையில் ஆளுநர் அறிவிப்பு

(சென்னை)

தை முதல் நாளை தமிழர் புத்தாண்டாக கொண்டாட வேண்டும் என தமிழக சட்ட சபை ஆளுநர் உரையில் வேண்டுகோள் விடுக்கப் பட்டது.

நேற்று முன்தினம் தொடங்கிய தமிழக சட்ட சபை கூட்டத்தில் ஆளுநர் பேசும் போது தெரி வித்ததாவது,

பெரும்புலவரும் தனித் தமிழ் இயக்கத் தைத் தோற்றுவித்தவருமான மற்றமலை அடிகளார் தலைமையில் ஐநூறுக்கும் மேற் பட்ட புலவர் பெருமக்கள் 1921 ஆம் ஆண்டு சென்னை பச்சையப்பன் கல்லூரியில் ஒன்று கூடி தமிழர்க்கென்று ஒரு தனி ஆண்டு தேவை என்று கருதி அய்யன் திருவள்ளுவர் பெயரில் தொடர் ஆண்டு ஒன்றினைப் பின் பற்றுவதென்றும் அதையே தமிழ் ஆண்டு எனக் கொள்வதென்றும் திருவள்ளுவர் பிறந்த ஆண் கி.மு. 31என்றும் முடிவெடுத்தார்கள்.

அந்தக் கருத்தினை முப்பத்தியேழு ஆண்டு களுக்கு முன்பே முதல் அமைச்சர் கருணாநிதி ஏற்றுக்கொண்டு 1971 ஆம் அண்டு முதல் தமிழ் நாடு அரசிதழிலும் நடை முறைப்படுத்திட ஆணை பிறப்பித்தார்.

திருவள்ளுவர் ஆண்டு பிறக்கும் தைத்திங் கள் முதல் நாள் தான் தமிழ் புத்தாண்டு தொடக் கம் என்பது ஒட்டுமொத்தமாக எல்லாத் தமிழ் அறிஞர்களும் ஒப்புக் கொண்டுள்ளமை உண்மை.

தைத் திங்கள் முதல் நாளையே தமிழ் புத் தாண்டுத் தொடக்கம் என அறிவித்து நடை முறைப்படுத்திட இந்த அரசு முடிபு செய்துள் ளது.

எனவே பொங்கல் திருநாளைத் தமிழர் திரு நாளாகக் கொண்டாடி வரும் தமிழ் நாட்டு மக் கள் இனி தமிழ் புத்தாண்டு பிறந்த நாளாகவும் இணைந்த இந்நாளை இரட்டிப்பு மகிழ்ச்சியுடன் கொண்டாட வேண்டும் என்றார். (அ-5)

## ஊழியர்களின் நலன்களுக்கு ஒருங்கிணைந்த செயல் திட்டத்துக்கு 21 நாடுகள் ஒப்புதல்

(அபுதாபி)

வெளிநாடுகளில் பணிபுரியும் ஊழியர்க ளின் நலனுக்கு ஒருங்கிணைந்த செயல் திட் டத்தை உருவாக்க இலங்கை உள்ளிட்ட 21 ஆசிய நாடுகள் முன்வந்துள்ளன.

வேலைக்கு ஆட்களைத் தேர்வு செய்வதில் நடைபெறும் முறைகேடுகளைத் தடுக்க இந்த ஒருங்கிணைந்த செயல் திட்டம் உதவும்.

அபுதாபியில் செவ்வாய்க்கிழமை நடை பெற்ற கூட்டத்தில் இந்தியா, ஆப்கானிஸ்தான், ஐக்கிய அரபு, எமிரேட்ஸ், பஹ்ரைன், வங்க தேசம், சீனா, இந்தோனேசியா, குவைத், மலேசியா, நேபாளம், ஜேர்மன், பாகிஸ்தான், பிலிப்பின்ஸ், கத்தார், சவூதி அரேபியா, சிங் கப்பூர், இலங்கை, தாய்லாந்து, வியட்நாம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த அமைச்சர்கள் பங்கேற்றனர். இதில் ஆசிய தொழிலாளர்க ளின் நலன் காக்க செயல் திட்டம் உருவாக்கப் பட்டது.

ஊழியர்களின் ஊதியத்தை நிர்ணயிப்பது மற்றும் அவர்கள் சந்திக்கும் குறைகளைக் களைவது உள்ளிட்டவை குறித்து விவாதிக் கப்பட்டது.

அத்துடன் வேலைக்கு ஆட்களைத் தேர்வு செய்வதில் நடைபெறும் முறைகேடுகளைக் களை யவும் முடிபு செய்யப்பட்டது.

தொழிலாளர்கள் தேவைக்கேற்ப கிடைக் கும் வகையில் நடவடிக்கை எடுப்பது ஒப்பந்தத் தொழிலாளர்களிடமிருந்து வேலை சுரண்டல் நடைபெறாமல் காப்பது உள்ளிட்டவையும் இக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

மேலும் ஒப்பந்தத் தொழிலாளர்களைத் தேவையின் அடிப்படையில் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு மாற்றிக்கொள்வதற்கு ஏற்ற சூழலை உருவாக்கவும் அமைச்சர்கள் ஒப்புக்கொண்டனர்.

இதன் மூலம் ஆசிய பிராந்திய நாடுகளில் வேலையில்லாத் திண்டாட்டம் குறைவதோடு பலருக்கு வேலை கிடைக்கும். அத்துடன் பொரு ளாதார வளர்ச்சிக்கும் வழிவகுக்கும். இதற்கு ஏற்ற வெளிப்படையான கொள்கைகளை வகுக் கவும் கூட்டத்தில் முடிபு செய்யப்பட்டதாக தெரி விக்கப்படுகிறது. (அ-5)

## இடைக்காலத் தீர்வுகுறித்து இந்தியத் தூதுவருக்கு வெளிவிவகார அமைச்சர் ரோஹித எடுத்துரைப்பு

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம, இந்திய உயர்ஸ்தானிகர் அலோக் பிரசாத் மற்றும் இணைத்தலைமை நாடுகளின் தூதுவர்களை வெளிவிவகார அமைச்சில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி யுள்ளார்.

இதன் போது அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் குழுவால் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இனப்பிரச்சினைக்கான இடைக்கால தீர்வுயோ சனைகள் அதனை அரசியல் யாப்பிற்கு அமை வாக அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் மேற் கொள்ளவுள்ள நடவடிக்கைகள் குறித்து விரி வாக எடுத்துக்கூறியுள்ளார்.

முன்னதாக நேற்று முன்தினம் மாலை 7 மணியளவில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ் தானிகர் அலோக் பிரசாத்தை வெளி விவகார அமைச்சில் சந்தித்த அமைச்சர் போகொல்லாகம இந்திய- இலங்கை சமா தான ஒப்பந்தத்தின் மூலம் 1987 இல் உரு வாக்கப்பட்ட அரசியல்யாப்பின் 13ஆவது திருத் தச் சட்டத்தின்மூலம் உருவான மாகாண சபை முறையை வடக்கு கிழக்கு மாகாணங்களின் பிரச்சினைக்கான இடைக்கால தீர்வாக அமுல் படுத்தவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த இடைக்கால தீர்வுத்திட்டம் முறையாக அமுல்படுத்தப்படும் அதே வேளை இனப்பிரச்சினைக்கான நிரந்தர தீர்வை உரு வாக்கும் நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக் கப்படும் என போகொல்லாகம சுட்டிக் காட்டி யுள்ளார்.

வடக்கு கிழக்கு பிரச்சினையை அரசியல் ரீதியில் தீர்ப்பதற்கு அரசாங்கம் முன்னெடுக் கும் இந்நடவடிக்கைக்கு இந்தியா ஆதரவளிக்க வேண்டும் எனவும் இந்திய உயர்ஸ்தானிகர் ஆலோக் பிரசாத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, இணைத்தலைமை நாடுக ளின் பிரதிநிதிகளை சந்தித்த ஜனாதிபதி, வடக்கு- கிழக்கு மாகாணங்களுக்கு அரசாங்கம் முன் வைக்கவுள்ள இடைக்கால அரசியல் தீர்வு குறித்து விளக்கியுள்ளார். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் அரசாங்கத்தின் முயற் சிக்கு இணைத்தலைமை நாடுகள் பூரண ஆதரவு வழங்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ-5)

## சென்னை விமான நிலையத்தில் புலிகள் நடமாட்டம் கியூ பிரிவு பொலிஸார் விடிய விடிய சோதனை

(சென்னை)

சென்னை விமான நிலையம் வழியாக விடு தலைப்புலிகள் நடமாட்டம் உள்ளதா என்பதை கியூ பிரிவு பொலிஸார் தீவிரமாக கண் காணித்து வருகின்றனர்.

விடுதலைப்புலி ஆதரவாளர்கள் பட்டியலை கொண்டு விடிய விடிய தேடுதல் வேட்டை நடந்து வருகிறது.

சென்னையில் தங்கியிருந்த விடுதலைப் புலிகள் அமைப்பின் உளவுப் பிரிவைச் சேர்ந்த நாதன் என்ற தம்பித்துரை பரமேஸ்வரனை கியு பிரிவு பொலிஸார் கைது செய்தனர். அவருக்கு உதவிய இலங்கை தமிழர்கள் எழு பேரும் கைது செய்யப்பட்டனர்.

சென்னை விமான நிலையம் வழியாக விடுதலைப்புலிகள் மற்றும் ஆதர வாளர் களின் நடமாட்டம் இருப்பதாக கியூ பிரிவு பொலிஸா ருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து சென்னை விமான நிலையத்தை கியூ பிரிவு பொலிஸார் கண்காணித்து வருகின்றனர்.

சென்னையில் இருந்து இலங்கை மற்றும் துபாய்க்கும் லண்டன் பிராங்க்பர்ட் பாரீஸ் உள் ளிட்ட நாடுகளுக்கு செல்லும் பயணிகளையும் அங்கிருந்து வரும் பயணிகளையும் கண் காணிக் கின்றனர்.

மேலும் விடுதலைப்புலிகள் மற்றும் அவரது ஆதரவாளர்கள் ஐம்பது பேரின் பெயர் கள் அடங்கிய பட்டியலுடன் தேடுதல் வேட்டை நடத்தி வருகின்றனர். இது குறித்து பொலிஸார் தெரிவிக்கையில்,

இலங்கையில் இருந்து வந்து தமிழகத்தில் தங்கியிருப்பவர்கள் பொலிஸ் நிலையங்களில் தங்கள் பெயரை பதிவு செய்து கொள்ள வேண் டும். அவர்கள் குறிப்பிட்ட கால அவகாசத்தில் பொலிஸ் நிலையங்களில் ஆஜராகி புதுப்பித்துக் கொள்ளவேண்டும்.

இந்த நடைமுறையை சிலர் கடைப்பிடிப் பதில்லை. அது குறித்து பட்டியல் எடுக்கப்பட்டு அவர்களை தேடும் பணியில் பொலிஸார் ஈடு பட்டுள்ளனர். அகதிகள் முகாமில் தங்கியுள்ள சிலர் மாயமாகியுள்ளனர்.

அவர்களிடம் நடமாட்டம் குறித்து அறிந்து கொள்ளவும் இதுபோன்ற சோதனை மேற் கொள்ளப்படும் என்று கூறினர். (அ-5)


வட இலங்கைச் சங்கீத சபை

நடாத்தும்

சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 161 ஆவது

ஆராதனை விழா -2008

காலம்

2008.01.27 ஞாயிற்றுக்கிழமை முற்பகல்

8.30 மணிமுதல் பிற்பகல் 2.30 மணிவரை

இடம்

யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்

தலைவர்

திரு.வே.தி.செல்வரத்தினம்

யாழ்.வலயக்கல்விப்பணிப்பாளரும்,

மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளரும்,

வட இலங்கைச் சங்கீத சபைத் தலைவரும்.

அ.தற்பரானந்தன்

செயலாளர்.

வட.இலங்கைச் சங்கீத சபை.

யாழ். வலயக் கல்வி அலுவலகம்.

நல்லூர். யாழ்ப்பாணம்.

வே.தி.செல்வரத்தினம்

சபைத்தலைவர்

# யாழ். கல்வியியற் கல்லூரிக்கு தெரிவான மாணவர்கள் விபரம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் 2008 கல்வியாண்டிற்காகத் தெரிவு செய்யப்பட்ட ஆசிரிய பயிலுநர்களின் பெயர் விபரங்களை யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் வெளியிட்டுள் ளார்.

அத்துடன் தெரிவு செய்யப்பட்ட ஆசிரிய பயிலுநர்கள் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு உரிய ஆவணங்களுடனும், சான்றிதழ்களுடனும், அவர்களது பெற்றோருடனும் கல்லூரிக்கு சமுகமளிக்குமாறும் பீடாதிபதி அறிவித்துள்ளார்.

இவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் 30 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகும். தெரிவு செய்யப்பட்ட பயிலுநர்களுக்கான கடிதங்களை இன்றும்நாளையும் (வெள்ளி, சனி) கல்லூரியில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

தெரிவானவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**சித்திரம்**

வி.பி.மோகன்ராஜ் -நல்லூர், கே.சசிவதனி-மிருசுவில், எஸ்.நிசாந் -ஆனைக்கோட்டை, என்.சிவா -ஆனைக்கோட்டை, சி.தயாளினி -குருநகர், ரி.ஜீன்-திருநெல்வேலி, ஆர்.சுதன்ராஜ் - சண்டிலிப்பாய், எஸ்.பவித்திரா - நல்லூர், ஏ.ஐ.நிலுசா – உரும்பிராய், எஸ்.ராஜேஸ் – ஏழாலை.

**விஞ்ஞானம் தமிழ்மொழி மூலம்**

எஸ்.சசிதரன்-பண்டத்தரிப்பு, எஸ்.டினோஜ்-கல்வியங்காடு, ரி.விஜிதா-யாழ்ப்பாணம், எஸ்.சுவர்ணா-கோண்டாவில், எஸ்.தியாகலிங்கம்-கச்சேரி கிழக்கு யாழ்ப்பாணம், ஆர்.தாட்சாயினி-சுழிபுரம், பி.சுரேந்தர்-வல்வெட்டித்துறை, எஸ்.வினோதன்-மானிப்பாய், எஸ்.கௌரி-சுண்டிக்குளி, கே.கஜேந்தினி-அல்வாய், ஏ.செந்தூரன் -கைதடி, எஸ்.சிந்திக்கா- தும்பளை, வை.வசீகரன் - வேலணை, ரி.ஐங்கரன் - கரவெட்டி, கே.சிவராசா-ஏழுதுமட்டுவாள்.

**ஆரம்பக் கல்வி**

பி.அமிர்தினி-வவுனியா, என்.திவ்யா-புத்தூர், ஜி.திருச்செல்வம்-சாவகச்சேரி, எம்.பாலதாஸ்-மட்டுவில், கே.அகலியா-யாழ்ப்பாணம், ஆர்.சிவானந்தினி - கோப்பாய், எஸ்.கோபிகா-மீசாலை, ஆர்.ரஞ்சிதா - சாவகச்சேரி, என்.சாமினி - வசாவிளான், ஏ.தீசானி-ஏழாலை, ரி.சிறீராஜிதா-அளவெட்டி, ஏ.காயத்திரி-காரைநகர், ஜே.சி.அகஸ்ரினா-நெடுந்தீவு, எம்.ஜெகதாரணி - ஏழாலை, ஜே.ஷரிகா - நவக்கிரி, கே.மோகனரூபி-தெல்லிப்பளை, பி.சதீஸ்-மானிப்பாய், என்.சுந்தரேசன்- ஆனைக்கோட்டை, கே.அஜந்தன் -திருநெல்வேலி, ஜே.ரம்யா-அல்வாய்.

**கணிதம் (தமிழ் மொழி மூலம்)**

பி.திருப்புகலூர் சிங்கம்- களபூமி காரைநகர், எம். வல்லிபுரம்-வரணி, எஸ்.பஞ்சாட்சரன்-பண்டத்தரிப்பு, கே.விநாயகம்பிள்ளை- அச்சுவேலி, ஆர்.ரேணுகா-நீர்வேலி, ஆர். கைலாசபிள்ளை-கொக்குவில் கிழக்கு, ஈ.அனு சாந்தி-ஏழாலை, ஜி.சச்சிதானந்தம்-புலோலி தெற்கு, வி.ஜேசுதாசன்- துன்மலை இளவாலை, வி.சுப்பிரமணியம்- தெல்லிப்பளை கிழக்கு.

**நடனம்**

ஜி.கிரிஷாந்தி-நவாலிதெற்கு, ரி.சதா - இணுவில் மேற்கு, கே.தர்சினி-நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம், ஏ.கந்தசாமி-கச்சாய் தெற்கு கொடிகாமம், ஆர்.கேதுஷா-நல்லூர், ரி.ஷாலினி-தெல்லிப்பளை, எஸ்.கிரிஷா - மீசாலை மேற்கு, கே.அழகுசுந்தரம் -ஏழாலை மேற்கு, ஜே.ஜி.ஈ.நிலோஜினி-மானிப்பாய் வடக்கு.

**நாடகமும் அரங்கியலும்**

ரி.ஐங்கரதீபன் - அம்பன் குடத்தனை, எஸ்.ஞானகுமார் - சுழிபுரம், ரி.மதீபன்-கோண்டாவில், எஸ்.சங்கநந்தன் - தும்பளை பருத்தித்துறை, எம்.தனுஷாந்-ஊரெழு கிழக்கு, ரி. ஷியாமினி- பண்டத்தரிப்பு, ஆர்.நிகாஸ் - புலோலி கிழக்கு, ஜே.பூர்மிளா- கணேசபுரம் வவுனியா, கே. கீர்த்தனா- அம்பன் குடத்தனை.

**சங்கீதம்**

பி.இராசதுரை-நவாலி தெற்கு, ரி.வசந்தரூபி-கோண்டவில் வடக்கு, கே.பிறேமிளா- சிறுப்பிட்டி வடக்கு, எஸ்.வினோதா-நாகபடுவான் பூநகரி, ரி.ரவிச்சந்திரன் -கட்டுடை, மானிப்பாய், ஜே. செல்வரட்ணம்-தலையாழி கொக்குவில், பி.ஜசிந்தா - கோப்பாய் மத்தி, என்.வினித்தா- சித்தன் கேணி, எஸ்.இளமதி - தெல்லிப்பழை, எஸ்.விஜிதரன்- குமுளமுனை முள்ளியவளை,

**கணிதம் (ஆங்கிலமொழிமூலம்)**

ரி.ரதிகரன் -இளவாலை, ரி.சுகிர்தா -உடுவில், ஆர்.ரேணுகா-நீர்வேலி தெற்கு, ஈ.அனுசாந்தி - குப்பிளான் வடக்கு, பி.சுப்பிரமணியம்-நெல்லியடி கிழக்கு, எஸ்.ஹர்ஷினி -சுன்னாகம் தெற்கு, எஸ்.சிவசங்கர்- அல்வாய் தெற்கு, ஆர். தேனுகா-கைதடி நுணாவில், எஸ்.காயத்திரி - கொக்குவில் கிழக்கு, எம். துளசிகா - வல்வெட்டி வல்வெட்டித்துறை, ரி.துரைசிங்கம் - உரும்பிராய் வடக்கு, எஸ்.சுரேகா- சாவகச்சேரி, எஸ்.தர்ஷன்- இணுவில் கிழக்கு, ஆர். குலேந்திரன் -கரவெட்டி மத்தி, எஸ். பத்மஜா-மீசாலை வடக்கு.

**விஞ்ஞானம் (ஆங்கில மொழி மூலம்)**

ரி.விஜிதா-நாவலர் வீதி யாழ்ப்பாணம், கே. அனுலா - ஏழாலை மேற்கு, ரி.யுவதர்ஷன் - உரும்பிராய் தெற்கு, ரி.சிந்துஜா -கச்சேரி கிழக்கு வீதி, ஏ.கனிமொழி - உரும்பிராய் கிழக்கு, எஸ். வினோதன்- மானிப்பாய், கே.கஜேந்தினி- வதிரி கரவெட்டி, எஸ்.சிந்திக்கா- தும்பளை பருத்தித்துறை, பி.துஜீவ்- வதிரி கரவெட்டி, எஸ்.யோகேந்திரன்-கலட்டி யாழ்ப்பாணம்.

**நூலக விஞ்ஞானம் (ஆங்கிலம்)**

என்.லிங்கநாதன் -நாகர் கோவில் தெற்கு, எஸ்.நிமனலவாசுகி-நயினாதீவு, எஸ்.நிரூஷியா-அரியாலை, பி.கசித்தா- சிறுப்பிட்டி கிழக்கு, எஸ். கிரிஷாந்தன்- அல்வாய் தெற்கு, என்.திவ்வியா-ஆவரங்கால் மேற்கு புத்தூர்.

**விசேட கல்வி**

பி.ராஜித- புலோலி தெற்கு, ஏம். அனோஜா-துன்னாலை வடக்கு, ஜே.கொலின்ஸ்ரன்-மானிப்பாய், ரி.தர்மதா - அளவெட்டி, ரி.செல்லத்துரை -சாவகச்சேரி, எஸ்.திவகுமாரன்- மீசாலை மேற்கு, என்.நிதர்சினி- சுழிபுரம் கிழக்கு, கே.சுரேந்திரன்- ஏழாலை தெற்கு, பி.ஜனராஜ்-அளவெட்டி தெற்கு, எஸ்.ஐங்கரநேசன்- மூளாய் தெற்கு, எஸ்.நிரூசியா- அரியாலை, எஸ்.சாருமதி-கைதடி, எஸ்.சுகர்ணன்- புலோலி தெற்கு, ஜி.சயந்தன்-டச் வீதி மானிப்பாய், கே.பி.சிந்துஜா - அல்வாய் கிழக்கு, என்.சர்மினி- வசாவிளான், கே.வினோதன்-வண்ணை கண்ணபுரம், கே.தர்மகுமார்-நெடுந்தீவு, எஸ்.தியாகராஜா-அளவெட்டி வடக்கு, எஸ்.ஜெகதாரணி-ஏழாலை மயிலங்காடு. (6)

## உதவிக் கல்விப் பணிப்பாளர், அதிபர்களுக்கு விண்ணப்பம் கோரல்

யா/புத்தூர் மெ.மி.த.க.பாடசாலை, யா/நீர்வேலி சீ.சீ.த.க பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்கான அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. கணித பாடத்தை பட்டத்திற்குக் கொண்ட யாழ்ப்பாண வலய ஆசிரியர்களிடமிருந்து கணித பாடத்திற்கான உதவிக் கல்விப் பணிப்பாளருக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது .விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவத்தினை யாழ். வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்பு விண்ணப்பிக்குமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (6)

* * *

## வலிகாமம் வலயத்தில்

வலிகாம வலயத்திற்குட்பட்ட யா/குளமங்கால் றோ.க.த.க.பாடசாலையில் அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது. இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2.1, வகுப்பு 2.11 (பட்டதாரியாக இருக்கவேண்டும்) சேர்ந்தவர்களிடம் இருந்தும் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு1, வகுப்பு 2.1, வகுப்பு 2.11 (பட்டதாரியாக இருக்கவேண்டும்) சேர்ந்தவர்களிடம் இருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மாதிரி விண்ணப்பப் படிவத்தினை வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு அதற்கமைய விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தங்கள் விண்ணங்களை பெப்ரவரி 8 ஆம் திகதிக்கு முன் உரிய முறைப்படி வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பபாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (5)

## ஆயுள்வேத மருந்தகம் அமைப்பதற்கான காணி

காரைநகரில் அண்மையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஆயுள்வேத மருந்தகத்திற்கு புதிய கட்டம் அமைக்கப்படவுள்ளது.

அதற்காக காணியை அன்பளிப்பாக வழங்க விரும்பும் பொதுமக்கள் தங்கள் பகுதி கிராமசேவையாளரூடாக காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையுடன் தொடர்பு கொண்டு வழங்கியுதவுமாறு காரைநகர் பிரதேச உதவி அரச அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் கேட்டுள்ளார். (6,246)






## யாழிற்கான 635 தபால் பைகள் திருகோணமலையில் தேக்கம்

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை -காங்கேசன்துறைகளிற்கிடையிலான பயணிகள் கப்பல் சேவை இடைநிறுத் தப்பட்டமையால் திருகோணமலையில் யாழ்.மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட 635 தபாற்பைகள் தேங்கியுள்ளதாக வடபிராந்திய பிரதம தபாலகர் எஸ்.ஜெபரட்ணம் தெரிவித்தார்.

பயணிகள் கப்பல்சேவை விரைவில் ஆரம்பிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டமையால் இத் தபால் சபைகள் அடுத்த வாரத்திற்கு முன் எடுத்து வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (5,10)



ஊரெழுவில் அண்மையில் கரித்தாஸ் கியூடெக் தேசிய சமாதான நிகழ்ச்சித் திட்டப் பிரிவால் நடாத்தப்பட்ட அமைதியின் சங்கம விழாவில் கரித்தாஸ் கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்பணி கி. யோ.ஜெயக்குமார் அடிகள் குழு உறுப்பினருக்கு சான்றிதழ் வழங்குவதையும், சமாதான நிகழ்ச்சித்திட்ட இணை!பாளர் திருமதி லலிதா விக்ரர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## விசேட பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் சாரணர் சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளையின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 2.30 மணிக்கு அரச அதிபர் க.கணேஷ் தலைமையில் யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த இரு வருடங்களாக இயங்காத நிலையில் உள்ள யாழ்.மாவட்ட சாரணர் சங்கத்தினை புனருத்தாரணம் செய்து சாரணிய வளர்ச்சிக்கும் சாரணர்களது வாழ்வாதாரத்திற்கும் உதவும் நோக்கமாகவும், இறுதியாகத் தெரிவு செய்யப்பட்ட செயற்குழுத் தலைவர் வெளிநாட்டிலும், செயலாளர் யாழ்.மாவட்டத்தில் பல காலமாக இல்லாமையாலும் முக்கியமாக தலைமையக வேண்டுதல்களுக்கும செயற்பாடுகளுக்குமாக இடைக்கால செயற்குழுத்தலைவர், செயலாளர் பொருளாளரைத் தெரிவு செய்து மாவட்ட கிளைச் சங்கப் பணிகளை முன்னெடுக்க ஏதுவாக மேற்படி கூட்டத்தினை யாழ்.மத்திய கல்லூரி அதிபர் உதவியுடன் கூட்டத் தீர்மானித்துள்ளதாக சங்கத் தலைவரும் யாழ்.மாவட்ட அரச அதிபரும் க.கணேஷ் தெரிவித்துள்ளார். (அ-6)

## ஞானச்சுடர் வெளியீடு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமசைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் மாதம் தோறும் வெளியிடப்படும் "ஞானச்சுடர்" ஆன்மீக சஞ்சிகையின் தை மாத வெளியீடு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் வெளியிடப்படும்.

இதன் வெளியீட்டுரையை செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகனும் மதிப்பீட்டுரையை அதிபர் ஆ.சிவநாதனும் நிகழ்த்துவார்கள். (அ-35)

## களபூமி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம்

(காரைநகர்)

காரைநகர் களபூமி திக்கரை ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் புதிதாக அமைக்கப்பட்ட பஞ்ச தள திரி தளராஜ கோபுரங்களுக்கும் ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் புனராவர்த்தன ஜீர்னோத்தாரண அஷ்டபந்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக பெருஞ் சாந்தி விழா எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.35 மணி முதல் 11.30 மணி வரையுள்ள சுபநேரத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான கிரியைகள் 23 ஆம் திகதி புதன் கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து இடம்பெறுகிறது. நாளை காலை 9 மணிமுதல் நாளை மறுதினம் மாலை 2 மணி வரை எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

தொடர்ந்து 27 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மகா கும்பாபிஷேகம் நடைபெறும். (அ-5)

## அபிராமிப்பட்டர் விழா

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் பெப்ரவரி மாதம் ஆறாம் திகதி புதன் கிழமை பி.ப 3 மணிக்கு தை அமாவாசை தினத்தை முன்னிட்டு அபிராமிப்பட்டர் விழா நடைபெறவுள்ளது.

விழாவில் பிற்பகல் 3மணிமுதல் 6.30 மணிவரை விசேட பூசை, அபிராமி அந்தாதி ஓதலும் பட்டர் எழுந்திருக்கும் உறித் தரிசனமும், பட்டருக்கு அம்பாள் காட்சி கொடுத்தலும், பூரணை நிலவுத் தரிசனமும், அம்பாளுடன் அபிராமிப்பட்டார் திருவீதியுலா வருதலும் இடம் பெறும் என ஆலய நிர்வாகசபை தெரிவித்துள்ளது. (அ-6)

## மெய்வல்லுநர் போட்டி

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி -2008, கல்லூரி மைதானத்தில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு கல்லூரி அதிபர் வ.ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக, வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரனும், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத் தலைவரும் வலைப் பந்தாட்டப் பயிற்றுநருமான திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கமும் கலந்துகொள்ளவுள்ளனர். (அ-6)

## பழைய மாணவர் சங்க பொதுச்சபைக் கூட்டம்

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய (ஸ்ரான்லிக் கல்லூரி) பழைய மாணவர் சங்க பொதுச் சபைக் கூட்டம் வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் சங்கத் தலைவர் எஸ். ரி.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (அ-6)


## விரிவுரைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டப் படிப்புகள் பீடத்தினால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட முதுகலைமாணிக் கற்கைநெறிக்கான தமிழ் மற்றும் சைவசித்தாந்தம் ஆகிய்வற்றிற்கான விரிவுரைகள் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் என பட்டப்படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

கற்கை நெறிகளுக்கான பதிவுகளை மேற்கொண்ட மாணவர்கள் அனைவரும் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றனர். (6)

## கற்பித்தலில் தேசிய டிப்ளோமா இறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் நடைபெறவுள்ள " கற்பித்தலில் தேசிய டிப்ளோமா இறுதிப்பரீட்சை ஏற்கனவே திட்டமிட்டபடி பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகி நடைபெறுமென தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தெரிவித்துள்ளார். (6)



# தரிசனம்


சரிநிகர்

# யுத்த நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலகியதன் பின்னர்...

## பாதிக்கப்படப் போவது பொதுமக்களே

**ச.பா.நிர்மானுசன்**
(சமூக செயற்பாட்டாளர்)

சந்தோசங்கள், சந்தேகங்கள் மற்றும் சர்ச்சைகள் நிரம்பிய போர்நிறுத்த ஒப்பந்தம் ஆறுவருட காலத்தை அணமிக்க இருந்த சமயத்தில் சிறிலங்கா அரசாங்கத்தால் கடந்த ஜனவரி 16ஆம் திகதி முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.



சர்வதேசத்தின் பார்வையில் 10 ஆயிரம் தொடக்கம் 15 ஆயிரம் உயிர்களை காப்பாற்றியதாக இந்த போர் நிறுத்தம் அமைந்திருந்தது. ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரை, என்றுமில்லாத வகையில் எதிர்பார்ப்பை ஏற்படுத்திய அளவுக்கு ஏமாற்றத்தையும் விரக்தியை யும் விட்டுச் சென்றுள்ளது.

புதிய உலக ஒழுங்கின் போக்கிற்கு ஏற்ப, ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதைலைப் புலிகளிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தம் ஒரு "சூழ்நிலை கைதி" போலவே நிலைத்து நீடித்து வந்தது. அதிலும் குறிப்பாக கடந்த இரண்டு வருட காலமாக "கோமா" நிலையிலேயே இருந்தது.

அதிகமான போர்நிறுத்த மீறல்களை தமிழீழ விடுதைலைப் புலிகளே மேற்கொண்டதாக சிறிலங்கா அரசாங்கத்தால் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆத்திரமூட்டும் பல சம்பவங்களும் சிறிலங்கா பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதில் கடந்த நவம்பர் மாதம் இடம்பெற்ற சு.ப. தமிழ்ச்செல்வன் மீதான தாக்குதலும், மாவீரர் நாளன்று நடத்தப்பட்ட தாக்குதல்களும் முக்கியமானவற்றுள் சிலவாகும்.

மேற்குறிப்பிட்ட நிலையில், சர்வதேச சமூகம் தொடக்கம் உள்நாடு வரை தமிழீழ விடுதலைப் புலிகளே போர் நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலகுவார்கள் என்ற எதிர்வு கூறல்கள் நிலவியிருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் என்ன செய்வார்கள் என்ற எதிர்வு கூறல்கள் இம்முறையும் வழக்கம் போலவே தப்பாகிப் போய்விட்டது. இறுதியில் சிறிலங்கா அரசாங்கமே போர்நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து ஒருதலைப் பட்சமாக விலகியுள்ளது.

இது, "தேசபக்தர்கள்" என்று சொல்லப்படுவோரால் "மதிநுட்பமான" ஒரு நடவடிக்கையாக நோக்கப்பட்டாலும், "அரசியல் மூளைச்சலவை"க்கு உட்படாத பொதுமக்களுக்கு "அவலங்களுக்கு வழியமைக்கும் ஒரு முடிவாகவே" இது தோன்றுகிறது. அதேவேளை சர்வதேச அரங்கில் சிறிலங்காவிற்கு ஏற்பட்ட "இராஜதந்திர தோல்வியாகவே" இதனை கணிப்பிட முடியும். அதனையே சர்வதேச சமூக்த்தின் அறிக்கைகளும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

போர் நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து ஒரு தலைப் பட்சமாக விலகியமை மதிநுட்பமான நடவடிக்கையா, புலிகளின் நிகழ்சி நிரலுக்குள் அரசாங்கம் விழுந்துள்ளதா அல்லது இராஜதந்திர தோல்வியா என்பதை உறுதியாக தெரிந்துகொள்வதற்கு நீண்டகாலம் காத்திருக்க வேண்டிய தேவையில்லை. ஆனால், எத்தகைய விளைவுகள் ஏற்படினும் அதனால் பெருமளவில் மீண்டும் பாதிக்கப்படப் போவது பொதுமக்களே.


## பிரச்சினை அதிகரிக்கப் போகிறது

**பா.பாலஸ்கந்தன்**
(மாணவன்)

போர்நிறுத்த உடன்படிக்கையை சிறிலங்கா அரசாங்கம் முடிவுக்குக் கொண்டு வந்திருப்பதானது போரை நிறுத்துவதிலிருந்து விலகியதையே உணர்த்துகிறது. போரை நிறுத்துவதிலிருந்து விலகினால் அதன் அடுத்த படி போரைத் தொடர்வது தான்.

போர் மீள ஆரம்பித்தால் என்ன நடக்கும் என்பதை அண்மைய தென்னிலங்கைச் சம்பவங்கள் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளன.

போரில் நேரடியாகச் சம்பந்தப்படாத அப்பாவிச் சிங்கள மக்கள்



படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு பொறுப்புள்ள அரசாகத்தின் கடமை மக்கள் படு கொலை செய்யப்படுவதற்கான வழி வகைகளைத் திறந்து விடுவதல்ல. அரசாங்கம் மக்கள் படுகொலை செய்யப்படுவதைத் தடுப்பதற்கான வழிவகைகளில் ஈடுபடுவதற்குப் பதிலாக மக்களுடைய படுகொலையைக் காட்டி பிழைப்பு அரசியல் நடாத்த முனைவதாகவே தெரிகிறது.

அடுத்த கட்டமாக தாக்குதல்களுக்கு இலக்கான பகுதி மக்களுக்கு அரசாங்கம் ஆயுதங்களை வழங்கியது. மறுநாள் தாக்குதலில் அந்த ஆயுதங் களையும் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் எடுத்துச் சென்றிருக்கிறார்கள். இதில் இரண்டு விடயங்கள் இருக் கின்றன. விடு தலைப் புலிகள் ஒருமுறை சொல்லியிருந்தார்கள் எங்களுக்கான ஆயுதங்களை நாங்கள் எதிரியிடமிருந்தே எடுத்து வருகிறோமென. இது ஒரு பிரச்சினை.

மற்றையது, முழுச் சமூகமும் ஆயுத பாணியாக்கப்படும் அவலம் உருவாகிறது. ஏற்கனவே 1983இற்குப் பிற்பாடு வடக்கு கிழக்கு தமிழ் சமூகம் ஆயுதமயமாக்கப்பட்டதன் விளைவுகளை இன்றுவரை தமிழ் மக்கள் அனுபவித்து வருகிறார்கள். வரலாற்றிலிருந்து கற்காமல் சிங்கள சமூகமும் அத்தகைய அவல அனுபவத்தை இன்னொருமுறை பெற வேண்டுமா?

சிறிய ஆயுதங்களைக் கட்டுப்படுத்துவதற்கான அரசசார்பற்ற அமைப்புக் கள் ஆயுத விநியோகத்திற்குப் போய்விட்டனவா என்றே இப்போது கேட்கத் தோன்றுகிறது.

ஆகவே போர் நிறுத்த விலகல் என்பது பிரச்சினைகளைத் தீர்க்கப் போவதில்லை. இன்னுமின்னும் பிரச்சினைகளை உருவாக்கப் போகிறது.

## பொறுப்பு வாய்ந்த அரசு பலமுறை யோசித்திருக்க வேண்டும்

**துரைசிங்கம் அன்ரனி ஜெகநாதன்**
(மனித உரிமை ஆர்வலர்)

விடுதலைப்புலிகள் என்கிற இயக்கத்தை விடவும் பொறுப்பு வாய்ந்ததாக இருக்கும் அரசாங்கம் போர் நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலகுவதற்கு முன்னர் பலமுறை யோசித்திருக்க வேண்டும். ஏனெனில் விடுதலைப் புலிகள் ஒரு அரசாங்கம் அல்ல. சர்வதேச சமூகம் இன்று வரை அரசாங்கத்தி லேயே நம்பிக்கை வைத்திருக்கிறது. எனவே புலிகள் ஒப்பந்தத்தை மீறிய தாகச் சொல்லிக் கொண்டு அரசாங்கம் மீறமுடியாது. அதனைச் சரியாகக் கடைப்பிடிக்க வேண்டிய கடப்பாடு அரசாங்கத்திற்கு இருக்கிறது. அரசாங்கம் இதிலி ருந்து விலகியதானது மோதலை தீவிரப்படுத்துவதற்கு உதவியதாகவே அமையும். மற்றையது அதிகமான தடவை புலிகள் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மறியதாகச் சொல்லப் படுகிறது.அது ஒரு சரியான வாதமல்ல.

புலிகள் எங்காவது ஒரு கொடி ஏற்றினாலும் அரசாங்கம் அதனை முறையிடும். அது ஒரு போர் நிறுத்த மீறல் என கண்காணிப்புக்குழு அறிக்கையிடும்.அரசாங்கம் கிழக்கைக் கைப்பற்றினாலும் அதுவும் ஒரு யுத்த நிறுத்த மீறலாகவே கணக்கிடப் படும். கிழக்கை அரசாங்கம் கைப்பற்றுவது என்பதும் புலிகள் எங்காவது கொடி ஏற்றுவது என்பதும் ஒருபோதும் ஒன்றாகி விடாதல்லவா? போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலில் இருந்தால் அதனைக் கண்காணிக்க கண்காணிப்புக் குழு செயற்படும். கண் காணிப்புக்குழு இருந்தால் அரசாங்கம் என்றாலென்ன விடுதலைப் புலிகள் என்றாலென்ன தமது நடவடிக்கைளைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவை ஓரளவுக்கேனும் இருக்கும். கண்காணிப்பதற்கு ஆள் இல் லாதது என்பது இருதரப்புமே வன்முறையை அதிகரிப்பதற்கு .வழிகோலும். உதாரணமாக 2002ஆம் ஆண்டு இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் உடனடியாகப் படுகொலைகள் குறைவடைந்தன.



தமிழ் மக்கள், சிங்கள மக்கள் ஆகிய இரு தரப்பினருமே நிம்மதிப் பெருமூச்சு விட்ட காலகட்டம் அது. அதுமட்டுமல்ல இரு இனமக்களுக்கிடையேயுமான போக்குவரத்து, கொடுக்கல் வாங்கல் உறவுகள் என்று ஒரு சுமுக சூழல் வேகமாகவே வளர்ந்தது. ஆனால் 2005ஆம் ஆண்டின் பின் மெல்ல மெல்ல வன்முறை அதிகரித்து ஆட்கடத்தல், காணாமல் போதல படுகொலை என வளர்ந்து இன்று உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது. சர்வதேச சமூகத்தின் பொறுப்பீனம் இதற்கு ஒரு காரணமாயமைந்து விட்டது. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அமைதி முயற்சியில் ஈடுபட்ட நோர்வேக்கு முடியாமல் போய் விட்டது. இன்னொரு வகையில் நோர்வே போன்ற ஒரு நாட்டினால் இதனைச் செய்து முடிப்பது சாத்தியமில்லை. ஐக்கிய நாடுகளைப் போன்ற ஒரு பலமிக்க அமைப்புக்கு இது சாத்தியமாக இருக்கலாம். எனவே ஐ.நா. இதில் தலையிடுவதும் மீளவும் போர் நிறுத்தம் ஒன்றினூடாக அமைதிப் பேச்சுக்களை நோக்கி திரும்புவதுமே நிலைமையைச் சீரமைக்க உதவும்.

## அரசு எப்போதோ விலகிவிட்டது!

**எஸ்.பிரசாந்**
(யாழ்ப்பாணம்)


போர் நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து இப்போது உத்தியோகபூர்வமாக அரசாங்கம் விலகியிருக்கலாம். ஆனால், அரசாங்கம் எப்போதோ அதாவது விடுத லைப்புலிகள் விலகுவதற்கு முன்னரேயே விலகிக் கொண்டது என்பது தான் உண்மை. அதாவது போர் நிறுத்த ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்களை நடைமுறைப் படுத்துவதிலிருந்து எப்போது விலகியதோ அப்போதே. உதாரணமாக ஒப்பந்தத்தில் சொல்லியபடி தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் உள்ள பொது இடங்களான பாடசாலை போன்றவற்றிலிருந்து இராணுவம் விலகியிருக்க வேண்டும். ஆனால் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படவில்லை. அப்போதே போர் நிறுத்த ஒப்பந்தம் வலுவிழந்து விட்டது. அத்தோடு நிற்காமல் புலிகளின் பகுதிகளுக்கு ஆழ ஊடுருவும் அணியினர் சென்று தாக்குதல்களை ஆரம்பித்தார்கள்.



புலிகளும் பதிலுக்கு பதில் தாக்குதல்களை ஆரம்பித்தார்கள். இப்போது வெறுமனே காகிதத்திலிருந்த ஒப்பந்தத்திலிருந்து அரசாங்கம் விலகியுள்ளது அவ்வளவு தான். அரசாங்கம் அமைதிப் பேச்சினூடாக இப் பிரச்சினையைத் தீர்க்காமல் போர்ச்சூழலை உரு வாக்கியிருப்பதை ஆதரிக்கும் சக்திகள் யார் யார் என்று பட்டியலிட்டால் உண்மையில் போரினால் யார் யாருக்கு என்ன இலா பம் கிட்டுகிறது என்பதை அறிந்து கொள்ளலாம்.

வெளிப்படையாகவும், தெளிவாகவும் தெரிகிற ஒரு உண்மை இதில் முதல் நன்மை பெற்றப் போபவர்கள் ஆயுத வியாபாரிகள் தவிர வேறு யாரும் இல்லை என்பது தான். அவர்களோடு சேர்த்து ஆயுத தரகர்களும் பெரும் நன்மை பெறுவார்கள்.

இரண்டாவது தரப்பினர் ஜனநாயக வழிமுறையூடாகவும், வெளிப்படைத் தன்மையுடனும், மக்கள் நலன்சார்ந்தும் ஆட்சி நடாத்த முடியாதவர்கள் தங்களுடைய ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ள போரை ஒரு கருவியாகப் பாவிப்பர். போர் அவர்களுக்குக் கிடைத்த ஒரு பெரிய வரப்பிரசாதம். மூன்றாவது தரப்பினர் போரில் குளிர் காயும் சர்வதேச சமூகத்தினர். இவர்கள் போரை நிராகரிப்பதாகக் காட்டிக் கொண் டாலும் உள்ளூர அதனை ஆசீர்வதிப்பவர்கள். போரின் காரணமாக சுயசார்பிழந்து பொருளாதார வளர்ச்சி குன்றி இந்த நாடு கையேந்தும் நாடாக உருவாவதில் தான் அவர்கள் மகிழ்ச்சி காண்பார்கள். அப் போது தான் தாம் நினைத்தபடி இந்த நாடுகளை ஆட்டிப்படைக்க முடியும் என்ப தை அவர்கள் அறிவார்கள். இந்தப் பின் னணி ஒன்றையும் பற்றி அக்கறைப் படாமல் இரண்டு சமூகங்களும் மோதிக் கொள்வது என்பது எமது தலையில் நாமே மண்ணைப் போட்டுக் கொள்வதைப் போன்றது தான். இப்படிச் சொன்னாலே தேசத் துரோகியாக்கி விடுகிற அரசாங்கமும் தேச பக்தர்களுமல்லவா இப்போது நாட்டில். இருக்கிறார்கள்.



# தரிசனம் (24) ராவய

# யுத்த நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலகியதன் பின்னர்...

## யுத்தத்திற்கு விடுக்கப்படும் அழைப்பு

*பிரியதர்ஷினி ஆரியரத்ன*

யுத்த நிறுத்தத்தில் இருந்து விலகியதன் பின்னரான நிலைமையை ஆராய்வதற்கு முன்னர் யுத்த நிறுத்த காலத்தின் நிலைமைகள் குறித்து நாம் ஆராய வேண்டியது அவசியமாகும். யுத்த நிறுத்தம் அமுலில் இருந்த போது யுத்த நிறுத்த கண்காணிப்பு குழு பணியில் இருந்தது.



மோதல்களை கண்காணிக்க ஒரு நடைமுறை அமுலில் இருந்ததினால் மோதல்கள் ஓரளவு கட்டுப்பாடான நிலைக்குட்பட்டிருந்தது. யுத்த நிறுத்தம் இரத்துச் செய்யப்பட்ட பின்னர் கண் காணிப்புக் குழுவின் பணிகளும் நிறுதத்தப்பட்டுவிட்டன. அதனால் இரு தரப்பினருக்கும் யுத்தம் செய்வதென்பது எளிதான காரியமாகி விடடது. யுத்த நிறுத்தம் அமுலில் இருந்த போது விடுதலைப் புலிகள் அதிகமாகவும், படையினர் அவர்களைவிட குறைவான எண்ணிக்கையிலும் யுத்த நிறுத்த மீறல்களில் ஈடு பட்டிருந்தனர். எனினும் இந்த யுத்த நிறுத்த மீறல்களின் அளவானது எண்ணிக் கையை விட சம்பவத்தின் தன்மையைக் கொண்டு மாறு படக் கூடும்.

விடுதலைப் புலிகள் அமைப்பு உத்தியோகபூர்வ அமைப்பு அல்ல. ஆனால் அரசாங்கம் மக்களினால் நியமிக்கப்பட்டது. உதாரணமாக அரசாங்கத்தை ஒரு குடும்பம் என்று எடுத்துக் கொண்டால், விடுதலைப் புலிகள் அந்த குடும்பத்தின் சொல் பேச்சு கேளாத, அடங்காத குழந்தை என்று வைத்துக் கொள்ளலாம். அதன் படி இலங்கைக்குள் இருக்கும் ஒரு விடயமே விடுதலைப் புலிகள். அதனால் புலிகள் யாரை பிரதிநிதித்துவம் செய்கின்றார்கள், அவர்கள் யாருக்காக முன்னிற்கின்றார்கள் என்ற விடயங்கள இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன.

இந்த நிலையில் யுத்த நிறுத்த உடன்படிக்கையிலிருந்து விடுதலைப் புலிகளே விலகியிருக்க வேண்டும். விடுதலைப் புலிகள் விலகியிருந்தால் யுத்தம் வேண்டும் என்று கருதும் தரப்பே அவ்வாறு செய்துள்ளது என்ற முடிவுக்கு வரமுடியும். எனினும் அரசாங்க தரப்பு யுத்த நிறுத்தத்திலிருந்து விலகுவதாக அறிவித்திருப்பது அரசாங்கமே யுத்தத்தினை விரும்புகின்றது என்ற முடிவினை எடுக்க நேரிடுகின்றது.

சர்வதேச பார்வையிலிருந்து நோக்கும் போது அரசாங்கத்திற்கு யுத்தம் தேவைப்படுவதாகத் தோன்றுகின்றது. ஏன் அரசாங்கத்திற்கு யுத்தம் தேவைப்படுகின்றது? நாட்டிற்குள் இருக்கும் எதிர்ப்பு நிலைகளைப் போக்கவே அரசாங்கத்திற்கு யுத்தம் தேவைபடுகின்றது. இந்த நிலைமையை புரிந்து கொள்ளவே நாம் யுத்த நிறுத்தத்தின் பின்னரான விளைவுகளைப் பற்றி ஆராய வேண்டியுள்ளது.

இலங்கைக்கு வழங்கும் வரிச்சலுகைகளை இரத்து செய்ய ஐரோப்பா ஒன்றியம் எதிர்பார்த்துள்ளது. அதனால் பலர் தொழிலை இழக்கும் நிலை ஏற்படலாம். மறுபுறம் ஜப்பானின் நிதி உதவிகள் நிபந்தனைகள் அடிப்படையிலேயே கிடைக்கும். ஏனெனில் யுத்தம் செய்யும் நாடுகளுக்கு உதவ அந்நாடு விரும்புவதில்லை.

விடுதலைப் புலிகள் பயங்கரவாத இயக்கமாக அபகீர்த்தி நிலையை அடைந்திருந்தனர். எனினும் படையினர் தாக்குதல் தொடுக்கும் போது அமைதியாக இருக்கக் கூறுகின்றீர்களா என்று கேட்கும் சிறிய சாதக நிலையை இதனால் அவர்கள் எதிர்வரும் காலங்களில் அடையக் கூடும்.

அத்துடன் சர்வ கட்சி பிரதி நிதிகள் குழுவினரால் சமர்ப்பிக்கப்படும் விடயங்கள் என்ன என்பது குறித்தும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். அதில் பிரேரிக்கப்படும் விடயம் எதுவாக இருந்தாலும் மீண்டும் யுத்தம் ஆரம்பமாகுமாயின் அதனால் மக்கள் எந்தளவு பாதிக்கப்படுவார்கள் என்பது நாம் அறியாத விடயமல்ல. இந்த சூழ்நிலையில் ஐ.நாவின் கண்காணிப்பு குழுவின் அவசியம் குறித்த யோசனை பற்றிய அபிப்பிராயம் உள்ளது.

ஏனெனில் எதிர்வரும் காலங்களில் பாதிக்கப்படும் மக்களுக்கு உதவ அமைப்பு ஒன்று தேவை. அத்துடன் அதிகாரப் பகிர்வு தொடர்பான தீர்வினை அரசாங்கம் சமர்ப்பிக்க வேண்டியது அவசியமாகும்.

## அரசியல் தீர்வினை துரிதப்படுத்துவோம் யுத்தம் இரு நாடுகளை உருவாக்கும்

*வண. பிதா. சரத் இத்தமல்கொட*

நெருக்கடிக்கு தீர்வு யுத்தமா அல்லது அதிகாரப் பகிர்வா என்ற விடயமே தற்போது முன்னிலைக்கு வந்துள்ளது. இங்கு யுத்தம் தான தீர்வு என்று தீர்மானிக்கப்பட்டாலும் எதிரி மனப்பாங்கும், நாடு பிளவுப்படலுமே இதன் விளைவுகளாகப் போகின்றது.

இரு மொழிகள் இருந்தால் ஒரே நாடு. ஒரு மொழி இருந்தால் இரு நாடு என்று கூறியவர்களின் கருத்துக்கள் இன்றைக்கும் செல்லுபடியாகும். என்னைப் பொறுத்தவரையில் அரசியல் தீர்வினை தெரிவு செய்து கொண்டால் ஒரு நாடு. இராணுவத் தீர்வினை தெரிவு செய்து கொண்டால் இரு நாடுகள்.

அரசியல் தீர்வுக்கான இணக்கப்பாட்டினை ஏற்படுத்திக் கொள்வதே இன்றைய அவசர தேவையாக உள்ளது. அவ்வாறு நிகழுமாயின் நம்பகத் தன்மை, ஒற்றுமை தன்மை கொண்ட நாடாக இந்நாடு மலரும் என்று எதிர்பார்க்க முடியும்.

அரசியற் கட்சிகளும் பல்வேறு தரப்பட்ட குழுக்களும் புலிகளின் பலத்தைத் தகர்த்து அவர்களை வெற்றிக் கொள்ள முடியும் என்று கருதுகின்றனர். அது புத்தி சாதூரியமான விடயமல்ல. கானல் நீரை தேடும் செயல் இதுவென்றே நான கருதுகின்றேன் அதனால் இலங்கை இரு தேசங்களாகப் பிளவுப்படுவதைத் தவிர்க்க முடியாது. அதனால் அரசியல் தீர்வின் அவசியமே இங்கு வலியுறுத்தப்படுகின்றது. இப்பொழுதும் அதற்கான சாதக நிலை அதிகமாக உள்ளது. இந்த அரசியல் தீர்வினை ஒரு சில ஆண் டுகளுக்கு முன்னர் சமர்ப்பித்திருக்க வேண்டும். தற்போதும் தாமதமெனினும் மேலும் பல அழிவுகள் நேர்வதற்கு முன்னர் அரசியல் தீர்வினை முன் வைப்பது அவசியமாகும்.

இராணுவ அதிகாரத்தைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகளை தோற்கடித்தாலும் யுத்தம் இரண்டு நாடுகள் என்ற பிரதி விளைவை ஏற்படுத்தி விட்டே அது நிறைவடையும். தற்போது மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நம்பிக்கையீனமும் ஐயப்பாடும் ஒரே நாடு என்ற விடயத்தை மழுங்கடித்து இரு நாடுகளில் வாழும் மனநிலையை ஏற்படுத்தும்.

## பறித் தெடுக்கும் நடைமுறை இல்லாத அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும்

*லங்கா சமமாஜக் கட்சியின் செயலாளர் விமலசிறி டி மெல்*

யுத்த நிறுத்த உடன்படிக்கையின் சாதக நிலைகள் அனைத்தும் தற்போது இரத்துச் செய்யப் பட்டுவிட்டன. யுத்தம் முடிவடைந்து விடும் மரணங்கள் குறைந்து விடும் என்று மக்கள் ஓரளவு நம்பிக்கைக் கொண்டிருந்தனர். உண்மையில் யுத்த நிறுத்த காலத்தில் மரணங்கள் குறைவடைந்திருந்தன.

யுத்த நிறுத்த உடன்படிக்கையில் மாற்றம் செய்வதாக ஜனாதிபதி பதவியேற்ற போது குறிப்பிட்டாலும் அதனை மாற்ற அவரால் இயலவில்லை. புலிகளின் செயற்பாடுகள் அந்த எதிர்பார்ப் பிற்கு



பாதகமாக அமைந்து விட்டன.புலிகள், படையினர் மீது தாக்குதல்களை ஆரம்பித்தனர். கதிர்காமர் போன்ற தலைவர்களைக் கொல்ல துணிந்தனர். யுத்த நிறுத்தம் அமுலில் உள்ள போது இவ்வாறு நிகழும் போது எமது சில அரசியல்வாதிகள் கூறுவதைப் போன்று தாக்கினால் திருப்பி தாக்கும் நிலைக்கு அரசாங்கத்தினர் தள்ளப்பட்டனர். யுத்த நிறுத்த உடன் படிக்கை இரத்து செய்யப்பட்டுள்ள நிலையில் திருப்பி தாக்கும் செயற்பாடுகள் உக்கிரமடைந்துள்ளன. இப்பொழுது யுத்தம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இதனை நாம் ஒரு அரசியற் கட்சியாக எதிர்க்கின்றோம். இராணுவ முறைக்கு நாட்டை இட்டுச் செல்வதனை நாம் எதிர்க்கின்றோம்.

ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்தினால் நாட்டில் சமாதானம் ஏற்படும் என்று நாம் கருதினோம். இப்பொமுது ஏகோ அர்ப்பணிப்புடன் செய்யப் போகின்றார்கள் என்று சிங்கள மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

ஒஸ்லோ பேச்சுக்களில் புலிகள் பங்கேற்கவில்லை. அதன் நலனை தேசப்பற்றாளர்கள் என்று கூறிக் கொள்பவர்களே பெற்றுக் கொண்டனர். அவர்கள் இந்த யுத்தத்தை விரும்புகின்றார்கள் என்பதையே அவர்கள் கருத்துக்கள் உணர்த்துகின்றன. கருணையை வளர்க்க வேண்டிய சில பிக்குகளும் இதற்கு வேறு வழியில்லை என்கின்றனர். படுகொலைகளைச் செய்து நாட்டைக் காப்பாற்றுங்கள் என்று கூறு கின்றனர். பேச்சு வார்த்தைகளை அவர்கள் நிராகரித்துள்ளனர்.

மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான எந்த அறிகுறியும் தென்படவில்லை. சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவினரின் யோசனைகளின் பின்னரேயே அதற்கான வாய்ப்புகள் ஏற்படும். சுதந்திரக் கட்சியின் செயலாளரும் அதிகாரப் பகிர்வு குறித்தான யோசனைகள் சர்வ கட்சிப் பிரதி நிதிகள் குழுவிடமிருந்தே வரவேணடும் என்று தெரிவித்துள்ளார்.

எனினும் அது குறித்து எனக்கு சந்தேகமே நிலவுகின்றது. சர்வ கட்சிப் பிரதிநிதிகள் மற்றும் கட்சித் தலைவர்களுடனான சந்திப்பின் போது 12வேலைத் திட்டங்களை ஜனாதிபதி முன்வைத்த போதிலும் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு அதனை நிராகரித்துள்ளது.

மாகாண சபைகளுக்கு அப்பாலான விரிவான அதிகாரப் பரவலாக்கலே ஜனாதிபதியின் யோசனையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதற்கு புதிதாக சர்வ கட்சி மாநாடு எதுவும் தேவையில்லை. 13ம் திருத்தம் உள்ளது. ஜனாதிபதி அவரது யோசனைகளை ஒரு சட்டமூலமாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியும்.

மாகாண சபையிலிருந்தவர் என்ற வகையில் நானும் அவை பற்றி அறிவேன். பொலிஸ் அதிகாரம் இருக்கின்றது. அந்த பொலிஸ் அதிகாரம் இல்லாத போது மேல் மாகாண சபையின் முதல் தடவை முதலமைச்சராக தெரிவான சுசில முனசிங்கவை விசாரித்த போது அவர் கொஞ்சம் பொறுங்கள் வரத ராஜப்பெருமாள் தொடர்பில் ஜனாதிபதி பிரேமதா சாவுடன் பேச்சுவார்த்தை நடத் தப்படுகின்றது. அவர்களுக்குக் கிடைத்தால் எமக்கும் கிடைக் கும் என்றார்.

இந்த நிலைமை அதிகாரப் பகிர்வுக்கு ஏற்றதல்ல. அதிகாரப் பகிர்வு வழங்கப்படுமாயின் அது அரசியலமைப்பு ரீதியில் மேற்கொள்ளப்படவேண்டும்.

பொலிஸ் அதிகாரம் மட்டுமல்ல கல்வி, கூட்டுறவு அதிகாரமும் அவற்றுக்கு உண்டு. ஆனால அவற்றை பயன் படுத்த முடியாது. பிரதான அமைச்சுகள் ஊடாக அவை தடுக்கப்படுகின்றன. பகிர்வு செய்யப்படும் அதிகாரங்களை பறித்தெடுக்கும் நடைமுறையையே காணக் கிடைக்கின்றது.

## அழிவுக்கான அழைப்பு

*இலங்கை தேசிய ஆசிரியர் சங்கத் தலைவர் போலியர் குணவர்தன*

யுத்த நிறுத்தம் அமுலில் இருக்கும் போதும் இரு தரப்பும் மோதல்களில் ஈடுபட்டு வந்தது. எனினும் யுத்த நிறுத்தம் இரத்துச் செய்யப்பட்டுள்ள நிலையில் இரு தரப்பும் வரையறையின்றி மோதல்களில் பகிரங்கமாக ஈடுபட்டு வருகின்றன. எதிர்வரும் காலத்தில் இது பேரழிவுக்கான வாய்ப்பாகவே அமையும். தற்போது புத்தல பகுதியில் பல உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. உயிரிழப்புகள் ஏற்படும் நிலை குறித்தே நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. யுத்த நிறுத்த உடன் படிக்கை ஒன்றை ஏற்படுத்திக்




கொண்டு அரசியல் தீர்வினை நோக்கி பயணித்தலே மக்களுக்கு சார் பான செயலாகும். உலகில் பேச்சு வார்த்தைகளினாலேயே இவ் வாறான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன. தமிழ் மக்களுக்கான அர சியல் தீர்வினை முன்வைத்து அவற்றை புலிகளிடமும் சமர்ப்பிக்க அரசாங் கம் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும.

## காலில் இட்டு மிதித்த பின்னர் என்ன பேச்சுவார்த்தை?

*ஊடக ஊழியர் தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் தர்மசிறி லங்காபேலி*

யுத்த நிறுத்தம் அமுலில் இருந்த போதிலும் அதன் ஒரு தரப்பான ரணில் அரசாங்கம் அந்த உடன்படிக்கையை முழுமையாக அமுல்ப்படுத்தவில்லை. அதனால் இரு தரப்பிலும் உடன்



படிக்கை மீறல் நிலை ஏற்பட்டு அதிகாரமற்ற நிலை ஏற்பட்டது. ரணிலின் அரசாங்கத்தின் பலவீனமே இந்த நிலைக்குக் காரணம். இந்த பலவீனத்தைப் பயன்படுத்தியே தற்போதைய அரசாங்கம் ஜே.வி.பி மற்றும் சிஹல உறுமய உதவியுடன் தமிழ் மக்களின போராட்டத்தை யுத்தத்தினால் தீர்க்கும் முடிவுக்கு வந்தது. இந்த பிரச்சினை குறித்து தெளிவான புரிதல் தன்மை இல்லை என்பதையே அரசாங்கத்தின செயற்பாடுகள் உணர்த்தி நிற்கின்றன. (06ஆம் பக்கம் பார்க்க)



# தரிசனம்

රාවය

# உயர் நீதிமன்றத்தின் வகிபங்கு என்ன?

தமது வசிப்பிடத்திற்கு அருகில் பாதுகாப்பு காவலரண்களை அமைப்பதனை பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களை தவிர சாதாரண பொது மக்கள் எவரும் விரும்பமாட்டார்கள்.

அலுவலகங்களுக்கு செல்லும் போதும் வீடு திரும்பும் போது நிறுத்தப்படும் பஸ் வண்டிகளில் பல மணி நேரம் செலவிடுவதும் மக்களுக்கு பெரும் தலையிடியாகும்.

அமைச்சர்கள், எம்.பிக்களின் பாதுகாப்பினை பன்மடங்கு அதிகரிக்க வேண்டும் என்று கூறும் அரசாங்கம், பாடசாலைகளில் தாக்குதல் நடத்தப்படும் என்ற அச்சத்தில் பாடசாலைகளை மூடி ஒத்திகைப் பார்க்கின்றது.

காவலரண்கள் மற்றும் சோதனைச் சாவடிகளினால் நாட்டின் செயற்பாடுகளில் மந்த நிலை ஏற்படக் கூடும். மறுபுறம் பயங்கரவாதிகளைத் தோற்கடிக்கும் வரை பாடசாலைகளை மூடிவிடவும் முடியாது.

காவலரண்களை அமைத்தல், தமிழ் மக்களை வெளியேற்றுதல் மற்றும் இரவு நேர வீட்டுச் சோதனை படையினருக்கு வாய்ப்பளித்துள்ளார்.

நீதியான விடயங்கள் தொடர்பில் ஒருவரை கைது செய்ய முடியும். அத்தியாவசியக் காரணங்களுக்காக ஒரு வீட்டினை சோதனையிட நேர்ந்தால் அப்பிரதேசத்திற்கு பொறுப்பான பொலிஸ் அதிகாரியின் உதவியுடன் அந்நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

உயர்நீதிமன்றத்தின் இந்த தீர்ப்புகள் குறித்து அரசாங்கம் கலவரமடைய தேவையில்லை. உயர் நீதிமன்றத்தை குறை கூறுவதை விடுத்து அத் தீர்ப்புகளை நீதியான முறையில் ஆராய்வது அவசியம் ஆகும்.

எமக்கு காவலரண் பாதுகாப்பு தேவையில்லை. எமக்கு பிரச்சினைக்கான அரசியல் தீர்வே அவசியம் என்று கூறும் துணிவுள்ள அரசியல் இயக்கங்கள் இங்கு இல்லை.

காவலரண் குறித்து, தமிழ் மக்களை கைது செய்வது குறித்து, அவர்களை கொழும்பில் வெளியேற்றியமை குறித்து எதிர்ப்பு தெரிவிக்கக் கூடியளவுக்கு

ஆகிய மூன்று விடயங்கள் குறித்து அண்மையில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகள் பெரிதும் வரவேற்கத்தக்கது.

அங்கு மக்களின் முறைப்பாடுகளை நீதியுடன் கேட்டறிந்து கொண்ட பிரதம நீதியரசர், தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் அரசாங்கத்தின் செயற்பாடுகளை பெரிதும் கண்டித்துள்ளார்.

இந்த தீர்ப்பு குறித்து சிரேஷ்ட அமைச்சர்களுள் ஒருவரான ஜெயராஜ் பெர்ணாந்துபுள்ளே இது புலிகளின் சதி என்று கருதுவதாகக் குறிப்பிட்டார்.

தமிழ் மக்களை வெளியேற்றி அவர்களை துன்புறுத்தும் அரசாங்கத்தின் எதிர்பார்ப்புக்கு மாறாக அந்த தீர்ப்பு வெளியானமை காரணமாக அமைச்சர் அவ்வாறு குற்றம் சுமத்துகின்றார் என்றே கருத வேண்டியுள்ளது.

## தெற்கின் கருத்து

எனினும் இத் தீர்ப்புகள் இலங்கையின் அனைத்து இன மக்களின் உரிமைகளைக் காக்கும் தீர்ப்பாகவே அமைவதுடன் அது அமைச்சர் குறிப்பிடுவதனைப் போன்ற சதி செயல் அல்ல என்றே கூறவேண்டும்.

பிரதம நீதியரசர் அத்துடன் நிறுத்திக் கொள்ளவில்லை. அவர் தேசியப் பாதுகாப்பைப் பொருட்படுத்தாமலும் இல்லை.

காவலரண்களை விடுத்து எந்த வொரு இடத்திலும் சோதனைகளை மேற்கொள்ள பாதுகாப்பு

அவர்களுக்காகக் குரல் கொடுக்கக் கூடிய அரசியற் கட்சிகள் தென்னிலங்கையில் இல்லை.

இவ்வாறான சம்பவங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து அறிக்கைகள் வெளியிட சிறுபான்மையின அமைப்புக் பல உள்ளன.

விடுதிகளிலிருந்து விடிகாலையில் தமிழ் மக்களை பஸ்களில் ஏற்றும் போது வெள்ளவத்தை, மருதானை, கொம்பனிவீதி, கொட்டாஞ்சேனை சென்று அங்கு தமிழ் மக்களை வெளியேற்றுவதற்கு எதிராக வீதியில் கிடந்து எதிர்ப்புத் தெரிவிக்க துணிவும், அவ்சியமும் இல்லாத சிறுபான்மை ஆதரவாளர்கள் இல்லாத நாட்டில் உயர் நீதிமன்றம் தமிழ் மக்களுக்காக தமது இதய பூர்வமான தீர்ப்பினை வழங்கியுள்ளது.

**விமலநாத் வீரரத்ன**

முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீமின் பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ள விடயம் தொடர்பிலும் உயர் நீதிமன்றம் நீதியான தீர்ப்பினை வழங்கியுள்ளது. தமக்கு அச்சுறுத்தல் உள்ளதாக ஹக்கீம் குறிப்பிடுகின்றாராயின் அவருக்கு பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்று பிரதம நீதியரசர் தெரிவித்துள்ளார்.

அதனைவிட பாதுகாப்பு அதிகமாக தேவையெனின் மேலும் மனுவொன்றினைத் தாக்கல் செய்யுமாறும் அவர் கோரியுள்ளார்.

தமிழ் மக்களின் இருப்பு தொடர்பாகவும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடர்பாகவும் இந்நாட்டின் உயர் நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்புகள் வரலாற்று சிறப்பு மிக்கவையாகும்.

ஆனால் பாதுகாப்பை அதிகரித்து குறைத்து காவலரண்களை அமைத்தும் அரசாங்கம் பழிவாங்கல்களில் ஈடுபடுவதனால் பிரச்சினைகள் தீவிரமடையுமே தவிர தீர்வுகள் கிட்டாது.

## ஆசிரியர் குறிப்பு

**உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொள்வது எளிதன்று. எனினும் உடன்படிக்கைகளிலிருந்து விலகிக் கொள்வது எளிது. உடன்படிக்கையிலிருந்து விலகியதன் விளைவுகள் தெரிய வரும் போதே இதன் பாரதூரத் தன்மையை நாம் உணர்கின்றோம்.**

**2002 பெப்ரவரி 22 ம் திகதி இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை அரசாங்கத்தினால் இரத்து செய்யப்பட்டுள்ளது.**

**எனினும் விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்திலிருந்து விலகப் போவதில்லை என்றும் அதேநேரம் அரச படைகளின் தாக்குதல்களுக்கு எதிராக பதில் தாக்குதல்களை மேற்கொள்ளப் போவதாகவும் எச்சரித்துள்ளது. அரசாங்கம் யுத்தநிறுத்தத்திலிருந்து விலகிய பின்னர் ஏற்படக் கூடிய நிலைமை தான் என்ன?**

## யுத்த நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து

(05ஆம் பக்கத் தொடர்ச்சி...)

யுத்த நிறுத்தத்தை அமுல்படுத்தும், அதிகாரப்படுத்தும் யோசனைகள் அனைத்தும் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

எனினும் அதனை இரத்துச் செய்துள்ளதனால் நாடு பெரும் அழிவைச் சந்திக்க நேரிடும். இந்த நிலைமை தனமல்வில மற்றும் வடக்கு கிழக்கு பகுதிகளில் காணக்கிடைக்கின்றது.

இராணுவத் தீர்வினை முன்னிறுத்தி செயற்பட்டால் புலிகளை மீண்டும் சமாதான வழிக்குக் கொண்டு வரும் வாய்ப்பினை அரிதாக்கி விடும்.

அரசாங்கம் அடித்து அடி மைப்படுத்தி பேச்சுவார்த்தை நடத்த நினைக்கின்றது. அடித்து மிதித்த பின்னர் என்ன பேச்சுவார்த்தை?

இதனால் பெரும் சேதங்கள் ஏற்படக் கூடும். அரசாங்கத்தின் தீர்வுத் திட்டத்திற்கு ஜே.வி.பியும், ஹெல உறுமயவும் உடன்பட போவதில்லை. 39 ஆசனங்களைக் கொண்ட ஜே.வி.பி இதனால் அர சாங்கத்துடன் முரண்படும் நிலையும் ஏற்படக்கூடும்.



## இருந்ததா?

யுத்தப் பிரதேசத்தை தாண்டி அகதி முகாமுக்கு தன்னைப் பார்க்க வந்த

இருந்ததா
மகனே
உனக்கு
நிம்மதி
வயலுக்கு
செல்ல
சோளம்
சற்று
முற்றத்
தொடங்கியிருந்ததே
நீ கொண்டு வந்த
மாங்கன்று
கிணற்றடியில்
வளர்த்தேன்
பாதுகாக்க
செத்திருக்கும்
செத்திருக்கும்
இல்லாவிட்டால்
எப்படி

ஆரியவன்ச ரணவீர
(அத்து இதிங் என்ற நூலில் இருந்து)

## அன்பு வாசகர்களே!

"தரிசனம்" பற்றிய தங்களின் கருத்துக்கள் விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.

அனுப்பவேண்டிய முகவரி—

"தரிசனம்" வலம்புரி
இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.



## தரிசனம்

சரிநிகர்

# உயர் நீதிமன்றத்தின் வகிபங்கு என்ன?

*"I have a dream that my four children will one day live in a nation where they will not be judged by the colour of their skin, But by the content of their Character" - Martin Luther King Junior*

*என மார்டின் லூதர் கிங் கூறியது போல எனது இரு பிள்ளைகளாவது சிறுபான்மையினரானதால் ஒடுக்குமுறைக்குள்ளாகாமல் சுதந்திரமாக வாழ்வார்களா?*

மனித உரிமைகளைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் கடப்பாடும் அரசாங்கத்தையே சாரும். இலங்கையைப் பொறுத்தவரை 1978ஆம் ஆண்டு இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பின் 13ஆவது அத்தியாயத்தில் மனித உரிமைகள் அடிப்படை உரிமைகளாக வரையறுக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ளதுடன் குறித்த உரிமைகள் மீறப்படும் போது பாதிக்கப்பட்டவர் அல்லது அவர் சார்பான சட்டத்தரணி மூலம் உயர்நீதிமன்றத்தில் வழக்கிட்டு பரிகாரம் பெறுவதற்கான வழிமுறைகள் பற்றி உறுப்புரை 126இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆயினும் காலத்துக்குக் காலம் ஆட்சியாளர்களின் செயல்கள், செய்யாமை காரணமாக மனித உரிமைகள் மீறப்படுவதும், அதனால் அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவதும் நாம் கண்ணூடாகக் கண்ட அனுபவங்கள். இதில் குறிப்பாக சிறுபான்மையினரின் உரிமைகள் மீறப்படுவதும் அவர்களுக்கெதிரான எதேச்சதிகாரமான செயற்பாடுகளும் வரலாற்றில் நாம் கண்டவை.

இதனாலேயே பாதிக்கப்பட்ட மக்கள் ஏன் இந்நாட்டில் பிறந்தோம் என வெறுத்துக் கொள்வதும் வெளிநாடுகளில் தஞ்சம் புகுவதும் ஈற்றில் தமது உரிமைகளை நிலைநாட்ட ஆயுதப் போராட்டம் வரை செல்வதற்கும் வழிகோலியது.

இக்கட்டுரை குறிப்பாக தற்போதிருக்கும் ஆட்சியாளர்களால் கடந்த ஆறுமாத காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட உரிமை மீறல்களுக்கு எதிராக நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புக்களை ஆராய எத்தணிக்கிறது.

கடந்த 07-06-2007 இல் தலைநகரப் பகுதியான கொழும்பிலும் அதன் சுற்றுப் பகுதிகளிலும் விடுதிகளில் (Lodges) தங்கியிருந்த தமிழ் மக்கள் (சிறுவர்கள், பெண்கள், முதியோர் என்ற வேறுபாடின்றி) பொலிஸாரால் பலவந்தமாக பஸ்களில் ஏற்றப்பட்டு வட கிழக்கு மாவட்டங்களிலுள்ள தற்காலிக முகாம்களுக்கு அனுப்பப்பட்ட சம்பவமானது சிறுபான்மையினருக்கு எதிரான பாரிய அடிப்படை உரிமை மீறலாகும். மனித உரிமை செயற்பாட்டாளர்கள், நிறுவனங்கள், பொது சர்வதேச அமைப்புக்கள் மத்தியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. இச்சம்பவத்தைக் கண்டித்து கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் நடத்தப்பட்ட எதிர்ப்புப் பேரணியின் போது மனித உரிமை ஆர்வலர்கள், அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள், தனியார் நிறுவன பிரதிநிதிகள் என பல்வேறு வகையான மக்கள் அணி திரண்டனர். இதில் குறிப்பிடத்தக்க விடயம் தமிழர்களைப் போலவே பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த சிவில் அமைப்புக்களைச் சேர்ந்தோர் அதிகம் பங்குபற்றி தமது அக்கறையை வெளிப்படுத்தியிருந்தனர்,

இச் சம்பவத்திற்கெதிராக மாற்று கொள்கைகளுக்கான நிலையத்தால் 07-06-2007இல் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவானது உயர் நீதிமன்றத்தால் விசாரிப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டதுடன் தமிழர்களை பலவந்தமாக வெளி யேற்றுவதை தடுப்பதற்கான இடைக்கால தடையாணை யையும் வழங்கியது.

இவ்வடிப்படை உரிமை மீறல் மனுவானது அரசியலமைப்பின் உறுப்புரை

12(1) சட்டத்தின் முன் சகலரும் சமம் அனைவரும் சமமான பாதுகாப்புக்கு உரித்துடையவர்கள்.

14 (1) (h) சகல பிரஜைகளும் நடமாடும் சுதந்திரமும் தாம் விரும்பிய வசிப்பிடத்தில் வசிப்பதற்கான உரிமையையும் கொண்டவர்கள் என்ற அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக தடையாணையை வழங்கி

மேலும் உறுப்புரை 11

நபர் எவரும் சித்திரவதை, கொரூரம், மனிதாபிமான மற்ற அல்லது இழிவான நடத்துகை அல்லது தண்டனைக்கு உட்படுத்தப்படலாகாது.

உறுப்புரை 13(1)

நபர் எவரும் சட்டத்திற்கு முரணாக கைதுசெய்யப்படலாகாது. கைதுசெய்யப்படும் போது அதற்கான காரணத்தை அறிவிக்க வேண்டும்.

13(2) தடுத்துவைக்கப்படுபவர் எவரும் சட்டப்படி அருகிலுள்ள நீதவான் முன் ஆஜர் செய்யப்பட்டு தடுப்புக் கட்டளை பெறப்பட வேண்டும்.

என மேலே குறித்துரைக்கப்பட்ட அடிப்படை உரிமைகளின் அடிப்படையில் இம்மனு விசாரணைக்கான அனுமதியும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

டிசம்பர் மாதம் முற்பகுதியில் கொழும்பில் நிரந்தரமாக அமைக்கப்பட்டுள்ள வீதியோர காவலரண்கள் அகற்றப்பட வேண்டும் எனும் கட்டளையை உயர்நீதிமன்றம் வழங்கியது. இது அடிப்படை உரிமை அத்தியாயத்தின் 14ஆம் உறுப்புரையின் படி சுதந்திரமாக நடமாடுவதற்கான உரிமையை மட்டுப்படுத்துவதாக உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதன் காரணமாக அநேகமான வீதியோர காவலரண்கள் அகற்றப்பட்டிருந்த போதிலும் கூட மீளக் கட்டியெழுப்பப்பட்டுள்ளன.

இது தொடர்பாக தற்போதைய அமைச்சர்கள் சிலரால் நீதிமன்றத்துக்கு எதிரான கருத்துக்கள் கூட ஊடகங்களில் பிரதிபலிப்பதையும் காணலாம்.

இதே காலப் பகுதியில் கொழும்பில் பெரு வாரியாக தமிழ் இளைஞர், யுவதிகள் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவல் முகாம்களுக்கு அனுப்பப்பட்டமைக்கு எதிராக மீண்டும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினாலும் அதைத் தொடர்ந்து தோட்டத் தொழிலாளர் கட்சியினாலும் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. உயர் நீதிமன்றமானது விசாரணையின் பின் உடனடியாக தடுத்துவைக்கப்பட்டிருப்போரை விடுதலை செய்யும்படி கட்டளையிடப்பட்டது.

தலைநகரில் தமிழர்களின் வசிப்பிடங்கள் இரவு நேரங்களில் தேடுதலுக்கு உள்ளாக்கப்படுவதும் அவர்களை அசௌகரியப்படுத்துவதும் பொலிஸ், இராணுவ அதிகாரிகளின் கடமைகளில் ஒன்றாக உள்ளது. உயர்நீதிமன்றத்தின் அண்மைக்கால கட்டளைகளில் ஒன்றாக "ஏதாவது தவிர்க்க முடியாத காரணம் இருந்தால் தவிர இரவு நேரத்தில் பி.ப 9.00 மு.ப 6.00 மணி வரையான நேரத்தில் வீடுகளில் தேடுதல் நடத்த முடியாது.

இக்கட்டளை மூலம் ஓரளவாவது சிறுபான்மையினர் இரவுநேரத் தேடுதல் தொந்தரவிலிருந்து விடுபடுவதற்கான சாத்தியம் உள்ளது.

அதுமட்டுமன்று, மனித உரிமைகளுக்காக பாடுபடுவோர் பலரும் பாரிய அச்சுறுத்தலுக்கும் உயிராபத்துக்கும் ஆளாவது சர்வ சாதாரணமாகியுள்ளது. கடந்த சில வருடங்களாக மனித படுகொலைகள், கடத்தல் போன்றவற்றிற்கு எதிராகக் குரல் கொடுத்து வந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் படுகொலை செய்யப்பட்டது யாவரும் அறிந்ததே. இந்நிலையில் தற்போதுகொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான மனோகணேசன் அவர்கள் தமது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதால் நாட்டை விட்டு விட்டு வெளியேறி உள்ளதுடன் அவர் சார்பான சட்டத்தரணி மூலமாக மேன்முறையீட்டு நீதிமன்றில் தனது பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தக் கோரி "உறுதிகள் எழுத்தாணை" க்கான மனுத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

**மா.மங்களேஸ்வரி சங்கர்**
**(சட்டத்தரணி)**

சிறுபான்மையினருக்கு எதிரான பாரிய அடிப்படை உரிமை மீறலாவது மட்டுமன்றி மனித உரிமை செயற்பாட்டாளர்கள், நிறுவனங்கள், பொது சர்வதேச அமைப்புக்கள் மத்தியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. இச்சம்பவத்தை கண்டித்து கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் நடத்தப்பட்ட எதிர்ப்புப் பேரணியில் மனித உரிமை ஆர்வலர்கள், அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், உளளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள், தனியார் நிறுவன பிரதிநிதிகள் என பல்வேறு வகையான மக்கள் அணி திரண்டனர். இதில் குறிப்பிடத்தக்க விடயம் தமிழர்களைப் போலவே பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த சிவில் அமைப்புக்களைச் சேர்ந்தோர் அதிகம் பங்குபற்றி தமது அக்கறையை வெளிபிபடுத்தியிருந்தனர்,

இச் சம்பவத்திற்கெதிராக மாற்று கொள்கைகளுக்கான நிலையத்ததால் 6-8-07இல் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவானது உயர் நீதிமன்றத்தால் விசாரிப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டதுடன் தமிழர்களை பலவந்தமாக வெளியேற்றுவதை தடுப்பதற்கான இடைக்கால தடையாணையை வழங்கியது.

இவ்வடிப்படை உரிமை மீறல் மனுவானது அரசியலமைப்பின் உறுப்புரை

12(1) சட்டத்தின் முன் சகலரும் சமம் அனைவரும் சமமான பாதுகாப்புக்கு உரித்துடையவர்கள்

14(H) சகல பிரஜைகளும் நடமாடும் சுதந்திரமும் தாம் விரும்பிய வசிப்பிடத்தில் வசிப்பதற்கான உரிமையையும் கொண்டவர்கள் என்ற அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக தடையாணையை வழங்கி மேலும்

உறுப்புரை 11

நபர் எவரும் சித்திரவதை, கொரூரம், மனிதாபிமான மற்ற அல்லது இழிவான நடத்துகை அல்லது தண்டனைக்கு உட்படுத்தப்படலாகாது.

உறுப்புரை 13(1)



நபர் எவரும் சட்டத்திற்கு முரணாக கைது செய்யப்படலாகாது. கைது செய்யப்படும் போது அதற்கான காரணத்தை அறிவிக்க வேண்டும்.

உறுப்புரை13(2) தடுத்து வைக்கப்படுபவர் எவரும் சட்டப்படி அருகிலுள்ள நீதவான் முன் ஆஜர் செய்யப்பட்டு தடுப்புக் கட்டளை பெறப்பட வேண்டும். என மேலே குறித்துரைக்கப்பட்ட அடிப்படை உரிமைகளின் அடிப்படையில் இம்மனு விசாரணைக்கான அனுமதியும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

டிசம்பர் மாதம் முற்பகுதியில் கொழும்பில் நிரந்தரமாக அமைக்கப்பட்டுள்ள வீதியோரக் காவலரண்கள் அகற்றப்பட வேண்டும் எனும் கட்டளையை உயர் நீதிமன்றம் வழங்கியது. இது அடிப்படை உரிமை அத்தியாயத்தின் 14ஆம் உறுப்புரையின் படி சுதந்திரமாக நடமாடுவதற்கான உரிமையை மட்டுப்படுத்துவதாக உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதன் காரணமாக அநேகமான வீதியோரக் காவலரண்கள் அகற்றப்பட்டிருந்த போதிலும் கூட மீள கட் கட்டியெழுப்பப்பட்டுள்ளன.

இது தொடர்பாக தற்போதைய அமைச்சர்கள் சிலரால் நீதிமன்றத்துக்கு எதிரான கருத்துக்கள் கூட ஊடகங்களில் பிரதிபலிப்பதையும் காணலாம்.

இதேகாலப்பகுதியில் கொழும்பில் பெருவாரியாக தமிழ் இளைஞர் யுவதிகள் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவல் முகாம்களுக்கு அனுப்பப்பட்டமைக்கு எதிராக மீண்டும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினாலும் அதைத் தொடர்ந்து தோட்டத் தொழிலாளர் கட்சியினாலும் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. உயர் நீதிமன்றமானது உடனடியாக நீதிமன்றத்தால் விசாரணையின் பின் உடனடியாக தடுத்து வைக்கப்பட்டிருப்போரை விடுதலை செய்யும் படி கட்டளையிடப்பட்டது.

தலைநகரில் தமிழர்களின் வசிப்பிடங்கள் இரவு நேரங்களில் தேடுதலுக்கு உள்ளாக்கப்படுவதும் அவர்களை அசௌகரியப்படுத்துவதும் பொலிஸ், இராணுவ அதிகாரிகளின் கடமைகளில் ஒன்றாக உள்ளது. உயர்நீதிமன்றத்தின் அண்மைக்கால கட்டளைகளில் ஒன்றாக ஏதாவது தவிர்க்க முடியாத காரணம் இருந்தால் தவிர இரவு நேரத்தில் பி.ப 9.00 மு.ப 6.00 மணி வரையான நேரத்தில் வீடுகளில் தேடுதல் நடத்தமுடியாது. இக்கட்டளை மூலம் ஓரளவாவது சிறுபான்மையினர் இரவு நேர தேடுதல் தொந்தரவிலிருந்து விடுபடுவதற்கான சாத்தியம் உள்ளது.

மனித உரிமைகளுக்காக பாடுபடுவோர் பலரும் பாரிய அச்சுறுத்தலுக்கும் உயிராபத்துக்கும் ஆளாவது சர்வசாதாரணமாகியுள்ளது. கடந்த சில வருடங்களாக மனிதப் படுகொலைகள், கடத்தல் போன்றவற்றிற்கு எதிராகக் குரல் கொடுத்து வந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் படுகொலை செய்யப்பட்டது யாவரும் அறிந்ததே. இந்நிலையில் தற்போது கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான மனோகணேசன் அவர்கள் தமது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதால் நாட்டை விட்டு வெளியேறி உள்ளதுடன் அவர் சார்பான சட்டத்தரணி மூலமாக மேன்முறையீட்டு நீதிமன்றில் தனது பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தக் கோரி "உறுதிகள் எழுத்தாணை" க்கான மனுத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமன்றி முஸ்லிம் க்காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்கள் கூட தமது பாதுகாப்பு குறைக்கப்பட்டமையை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் அடிப்படையுரிமை வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

எனவே ஆட்சியாளர்கள் மீது நம்பிக்கையிழந்த போதிலும் தமது நியாயாதிக்க எல்லைக்குள் உயர் நீதிமன்றத்தால் வழங்கப்படும் தீர்ப்புக்கள் மூலமாவது சிறுபான்மையினரின் உரிமைகளை உத்தரவாதம் செய்வதாக உள்ளன. ஆயினும் நடைமுறையில் கொழும்பில் மட்டுமே இயங்கி வரும் உயர் நீதிமன்றம், வழக்கிடு செலவு, போன்ற இன்னோரன்ன காரணிகளால் தமது உரிமையை நிலைநாட்டுவது எத்தனை பேருக்கு சாத்தியம்?

# சச்சின் டெண்டுல்கரின் அதிரடி சதத்தால் இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 309/5

## லக்ஸ்மன், சேவாக் அரைச்சதம்

(அடிலெய்ட்)

சச்சின் டெண்டுல்கரின் அதிரடியான சதத்தினால் இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் வலுவான நிலையிலுள்ளது. அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது.





தொடரின் முதல் இரண்டு போட்டிகளில் அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற்றதுடன் மூன்றாவது போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றது. தொடரின் தீர்க்கமான போட்டியான 4 ஆவதும் இறுதியுமான போட்டி நேற்று அடிலெய்டில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதனடிப்படையில் ஜாபர் அணியிலிருந்து நீக்கப்பட்ட நிலையில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சேவாக்குடன் பதான் களமிறங்கினார்.

இருவரும் இந்திய அணிக்கு சிறந்த ஆரம்பத்தை ஏற்படுத்திய போதும் அணி 34 ஓட்டங்கள் எடுத்திருந்த போது பதான் 9 ஓட்டங்களுடன் ஜோன்ஸனின் பந்து வீச்சில் கில்கிறிஸ்டிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து 2ஆவது விக்கெற்றுக்காக சேவாக்குடன் இணைந்த டிராவிட் வழமையான நிதானத்துடன் துடுப்பெடுத்தாடினார். எனினும் டிராவிட் 18 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஜோன்ஸனின் பந்து வீச்சில் பொன்டிங்கிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அப்போது இந்திய அணி 82 ஓட்டங்களை எடுத்திருந்தது. அடுத்து களமிறங்கிய டெண்டுல்கர் சேவாக்குடன் இணைந்து அதிரடியாகத் துடுப்பெடுத்தாடினார். மறு முனையில் சேவாக் தனது 65ஆவது பந்தில் அரைச் சதத்தை எட்டினார். கடந்த 11 டெஸ்ட் போட்டிகளுக்கு பின் சேவாக் எடுத்துள்ள அரைசதமாகும் இது.

எனினும் மதியபோசன இடைவேளையின் பின் சேவாக் 63 ஓட்டங்களை எடுத்த நிலையில் பிரெட்லீயின் பந்துவீச்சில் ஹைடனிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.


அவரைத் தொடர்ந்து களமிறங்கிய கங்குலியும் 7 ஓட்டங்களை மாத்திரம் எடுத்த நிலையில் சுழற்பந்து வீச்சாளர் ஹொக்கின் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்து அரங்கு திரும்பினார்.

கங்குலி ஆட்டமிழந்தபோது இந்திய அணி 156 ஓட்டங்களை எடுத்த நிலையில் 4 விக்கெற்றுக்களையிழந்து தடுமாறியது. எனினும் 5ஆவது விக்கெற்றுக்காக டெண்டுல்கருடன் இணைந்தார் லக்ஸ்மன்.

இருவரும் இந்திய அணியை வலுவான நிலைக்கு இட்டுச்சென்றனர். ஆரம்பத்திலே சிறப்பாக துடுப்பெடுத்தாடிய டெண்டுல்கர் தனது 77ஆவது பந்தில் அரைச்சதத்தைக் கடந்தார். தொடர்ந்து அதிரடியாக ஆடிய சச்சின் டெண்டுல்கர் மற்றும் லக்ஸ்மன், அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர்.

டெண்டுல்கர் 92 ஓட்டங்களை எடுத்த போது ஒரு சிக்ஸர் மற்றும் ஒரு பௌண்டரியை அடித்து தனது 39ஆவது டெஸ்ட் சதத்தை பூர்த்தி செய்தார். இத்தொடரில் எடுக்கும் இச் சதம் அவரது 2ஆவது சதமாகும்.


மறுமுனையில் சிறப்பாக ஆடிய வி.வி.எஸ். லக்ஸ்மனும் தனது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். எனினும் லக்ஸ்மன் 51 ஓட்டங்களை எடுத்த



நிலையில் பிரெட்லீயின் பந்தில் கில்கிறிஸ்டிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அப்போது இந்திய அணி 5 விக்கெற்றுக்களையிமிழந்து 282 ஓட்டங்களை எடுத்தது. அடுத்து களமிறங்கிய தோனி படுமட்டாக துடுப்பெடுத்தாடினார்.

அவர் 2 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் ஜோன்ஸனின் பந்தில் அடித்தாட முற்பட்ட போது ஸ்லிப் திசையிலிருந்து ஹைடனிடம் பிடிகொடுத்த போது அதனை அவர் நழுவவிட தோனி அதிர்ஷ்டவசமாக தப்பினார். நேற்றைய முதலாவது நாள் ஆட்ட நேரமுடிவில் இந்திய அணி 5 விக்கெற்றுக்களையிழந்து 309 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. களத்தில் சச்சின் டெண்டுல்கர் 124 ஓட்டங்களையும் தோனி, 6 (54 பந்துகளை எதிர்கொண்டு ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காமலிருந்தனர். பந்து வீச்சில் பிரெட்லீ, ஜோன்ஸன் ஆகியோர் தலா 2 விக்கெற்றுக்களையும், பிரெட்ஹொக் ஒரு விக்கெற்றையும் வீழ்த்தினர்.



போட்டியின் இரண்டாவது நாள் ஆட்டம் இன்றாகும்.

### நடுவர் தவறான தீர்ப்பு

முதல் 2 டெஸ்ட் போட்டிகளிலும் நடுவர்கள் இந்திய அணிக்கு பாதகமாக நடந்துகொண்டதாக கூறப்பட்டது. இதனால் இரு நடுவர்களும் நீக்கப்பட்டனர்.

நேற்றைய போட்டியில் சேவாக் 63 ஓட்டங்கள் எடுத்த போது பிரெட்லீ பந்தில் ஹைடனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். ஆனால் பிரெட்லீ பந்து வீசியது முறை தவறிய (நோ.போல்) ஆகும். இதை கவனிக்காமல் நடுவர் ஆட்டமிழப்பு கொடுத்துவிட்டார். இதனால் புதிய சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

### சச்சின் புதிய சாதனை

நேற்று 146ஆவது டெஸ்டில் பங்கேற்கும் டெண்டுல்கர் அதிக போட்டிகளில் விளையாடிய வீரர்கள் வரிசையில் மூன்றாவது இடத்துக்கு முன்னேறி இன்னொரு சாதனை படைக்கிறார். அடிலெய்டில் நேற்று நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் 146ஆவது டெஸ்டில் பங்கேற்கிறார்.

இதன் மூலம் அதிக டெஸ்டில் பங்கேற்ற வீரர்கள் வரிசையில் அவுஸ்திரேலியாவின் வோர்னை (145) முந்தி மூன்றாவது இடம் பிடிக்கிறார். முதலிரண்டு இடங்களில் அவுஸ்திரேலியாவின் ஸ்டீவ்வோக் (168), ஆலன் போடர் (156) இருக்கின்றனர். (5)



அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள முத்தரப்பு ஒருநாள் போட்டிகளில் பங்கேற்க செல்லும் இலங்கை வீரர்கள் கோயிலில் வழிபாடு செய்யும் போது...

## 2ஆவது போட்டியிலும் பாக்.வெற்றி

இரண்டாவது ஒருநாள் போட்டியிலும் பாகிஸ்தான் அணி 5 விக்கெற்றுக்களால் ஸிம்பாவேயை வெற்றி



கொண்டது.

பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஸிம்பாவே அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. தொடரின் முதலாவது போட்டியில் வெற்றி பெற்று பாகிஸ்தான் அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இந்நிலையில் இரண்டாவது போட்டி நேற்று ஹைதராபாத்தில் பகல் ஆட்டமாக நடைபெற்றது. இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஸிம்பாவே அணி 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெற்றுக்களையிழந்து 238 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் மஸகட்ஷா 87 ஓட்டங்களையும் தைபு 81ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தான்வீர் 4 விக்கெற்றுக்களையும் இப்ரிக்கார் 2 விக்கெற்றுக்களையும்மற்றும்மலிக்,அப்ரிடி தலா ஒரு விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து 50 ஓவர்களில் 239 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 46.2 ஓவர்களில் 5 விக்கெற்றுக்களை மாத்திரம் இழந்து 239 ஓட்டங்களைப் பெற்று 5 விக்கெற்றுக்களால் வெற்றிபெற்றது.

இதில் நசீர் யம்ஷீட் 74 ஓட்டங்களையும் யூனிஸ்கான் 35 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் யூசுப் 38, அப்ரிடி 43 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சிக்கும்புரா, பிறஸ் மற்றும் மஸகட்ஷா ஆகியோர் தலா ஒரு விக்கெற்றை வீழ்த்தினர். இவ் வெற்றியுடன் தொடரில் பாகிஸ்தான் அணி 2:0என்றகணக்கில்முன்னிலை வகிக்கிறது. ஆட்டநாயகனாக பாகிஸ்தான் வீரர் தான்வீர் தெரிவானார்.(5)

## இந்-தெ.ஆபி அணிகளிற்கிடையேயான டெஸ்ட் தொடர் மார்ச்சில் ஆரம்பம்

இந்தியா–தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையேயான முதல் டெஸ்ட் கிரிக்கெற் போட்டி சென்னையில் எதிர்வரும் மார்ச் 26ஆம் திகதி ஆரம்பமாகிறது.

கும்ளே தலைமையிலான இந்திய டெஸ்ட் கிரிக்கெற் அணி அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டி தொடரில் விளையாடி வருகிறது. இதனை அடுத்து இந்தியா, இலங்கை, அவுஸ்திரேலியா ஆகிய 3 நாடுகள் பங்கேற்கும் ஒரு நாள் போட்டி பெப்ரவரி 3ஆம் திகதி அவுஸ் திரேலியாவில் ஆரம்பமாகிறது.


இதை தொடர்ந்து தென்னாபிரிக்க கிரிக்கெற் அணி 29 நாள் சுற்றுப்பயணமாக இந்தியா வந்து 3 டெஸ்ட் போட்டி கொண்ட தொடரில் விளையாடுகிறது. இந்த போட்டிக்கான அட்டவணை நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

இதன்படி தென்னாபிரிக்க அணி மார்ச் 18ஆம் திகதி மும்பை வருகிறது. 3 நாள் பயிற்சி ஆட்டம் மும்பையில் மார்ச் 20ஆம் திகதி முதல் 22ஆம் திகதிவரை நடக்கிறது.

இந்தியா–தென்னாபிரிக்கா அணிகள் இடையேயான முதல் டெஸ்ட் போட்டி சென்னையில் மார்ச் 26ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை நடக்கிறது. 2ஆவது டெஸ்ட் போட்டி அகமதாபாத்தில் ஏப்ரல் 3ஆம் திகதி முதல் 7ஆம் திகதி வரையும், 3ஆவது டெஸ்ட் போட்டி கான் பூரில் ஏப்ரல் 11ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரையும் நடக்கிறது. (5)

## இறுதிப் போட்டிக்கு ஷரபோவா

(மெல்போர்ன்)



அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி மெல்போர்னில் நடைபெற்று வருகிறது. இதன் பெண்கள் ஒற்றையர் அரை இறுதி ஆட்டம் நேற்று நடந்தது. ஒரு அரை இறுதியில் 5ஆம் நிலை வீராங்கனையான மரியா ஷரபோவா (ரஷியா) – (ஜெலீனா ஜோன்கோவிக் (செர்பியா) மோதினார்கள். இதில் ஷரபோவா 6–3, 6–1 என்ற நேர்செட் கணக்கில் வென்று இறுதிப் போட் டிக்கு தகுதி பெற்றார்.

மற்றுமொரு ஆண்கள் இரட்டையர் ஆட்டத்தில் மகேஷ்பூபதி (இந்தியா)–நோவல்ஸ்(பக்ரைன்) ஜோடி அரை இறுதியில் 4–6, 4–6 என்ற கணக்கில் எல் ரிச் அண்டிராம் (இஸ்ரேல்) ஜோடியிடம் தோற்றது. (5)

போவது சரியான பாதையாக இல்லாதபோது- வேகமாக ஓடுவதால் என்ன பயன்?

-ஜேர்மனி

வலம்புரி

## படையினரின் வீதித் தடையால் தென்மராட்சி மக்கள் படும்பாடு

முகமாலைக்கும், பலாலிக்கும் இடையில் இராணுவ வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடும்போது கண்டி வீதி, ஆஸ்பத்திரி வீதியின் ஒரு பகுதி மற்றும் பலாலி வீதி என்பன மூடப்படுகின்றன.

இது தவிர பருத்தித்துறை வீதி, கே.கே.எஸ். வீதி என்பனவும் படையினரின் வாகனப் போக்குவரத்துக்காக மூடப்படுவது தினசரி நிகழ்வாகி விட்டது.

இதில் பலாலி வீதி மூடப்படும்போது குறிப்பிட்ட சந்திகள் மூலமாக வீதியைக் கடப்பதற்குப் படையினர் அனுமதிப்பதனால் மக்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள் சற்றுக் குறைவெனலாம்.

ஆனால் யாழ்ப்பாணத்தையும் தென்மராட்சியையும் இணைக்கும் கண்டி வீதி மூடப்படுவதனால், பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

குறிப்பாகப் பிற்பகல் 2.30 மணியளவில் கண்டி வீதி மூடப்பட்டால் மாலை 4.30 மணிக்கே மீண்டும் அது பொதுமக்களின் போக்குவரத்துக்காக அனுமதிக்கப்படுகின்றது.

இந்நிலையில் தென்மராட்சியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகின்ற மாணவர்களும், ஆசிரியர்களும், பொதுமக்களும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

பாடசாலைகள் பிற்பகல் 2 மணிக்கு நிறைவடைந்ததும் தென்மராட்சிக்குச் செல்ல வேண்டிய மாணவர்கள் - ஆசிரியர்கள் குறைந்தது இரண்டு மணித்தியாலங்கள் வீதியோரங்களில் காத்திருக்கின்றனர்.

இவர்கள் தவிர யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெறுவதற்காக வருகின்ற தென்மராட்சியைச் சேர்ந்தவர்கள் சிகிச்சை முடிபடைகின்ற நேரம் பிற்பகல் 2 மணியாகவிருக்கும் போது வீடு திரும்ப முடியாமலும், ஓய்வெடுப்பதற்கு உரிய இடமில்லாமலும் தவிக்கின்றனர்.

இந்தப் பரிதாப நிலையை யார் எடுத்துச் சொல்வது? படையினர் என்றால் அவர்கள் சொல்வதைக் கேட்பதே நியதி என்றாகிவிட்டது. இதனால் பொதுமக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுவிக்கின்றனர்.

செம்மணிச் சந்திக்கும் நாவற்குழிச் சந்திக்கும் இடையே ஊடறுத்துச் செல்வதற்கு எந்தவித உப வீதிகளும் இன்மையால் செம்மணியில், நாவற்குழிச் சந்தியில் இரண்டு மணித்தியாலங்களுக்கு மேலாகத் தவம் கிடக்கும் நிலையைப் போக்குவதற்குப் படைத் தளபதிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவற்றைத் தெரிவிக்கும்போது படையினர் தமது நடவடிக்கையில் ஊடகங்கள் தலையிடுவதாகக் கூடக் கருதலாம். ஆனால் யாழ்ப்பாணத்தின் இன்றைய சூழ்நிலையில் மக்களின் அவலங்களை எடுத்துச் சொல்வதில் ஊடகங்களும் பின்னிற்குமாயின் மக்கள் பாடு பெருந்திண்டாட்டமாகிவிடும்.

எனவே ஊடகங்கள் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை வெளிப்படுத்தும்போது அதற்குத் தகுந்த பரிகாரம் காணப் படைத் தளபதிகள் முன் வரவேண்டும்.

எல்லாவற்றையும் ஏனோதானோ என்று தூக்கி எறிந்துவிட்டு யாழ்.குடாநாட்டு மக்களுக்கு உதவ நாம் தயார் என அறிக்கை வெளியிடுவது எவ்வகையிலும் பொருத்துடையதாகாது.

# இனப்பிரச்சினை தீர்வு விவகாரத்தில் அரசு பின்னோக்கி செல்கின்றது

## மேலக மக்கள் முன்னணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வில் அரசாங்கம் பின்னோக்கி செல்வது மட்டுமன்றி யுத்தத்திற்கு இந்திய அரசாங்கத்தின் உதவியை பெறுவதற்காக அவர்களை திருப்திப்படுத்த முயல்கின்றது என்று மேலக மக்கள் முன்னணியின் தேசிய அமைப் பாளரும் மேல் மாகாண சபை உறுப்பினருமான பிரபாகணேசன் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

13ஆவது அரசியல் அமைப்பு திருத்த சட்டம் ஏற்கனவே அரசியல் யாப்பில் உள்ளது. இதனை அமுல்படுத்துவதற்கு ஏற்கனவே ஜனாதிபதிக்கு அதிகாரமும் உள்ளது. ஆகவே இதை சர்வகட்சி பிரதிநிதிகள் குழு சிபாரிசு செய்திருப்பது வேடிக்கையாகவுள்ளது. 11/2 வருடங்கள் சர்வகட்சி பிரதிநிதிகள் கூடியது 13ஆவது அரசியல் திருத்த சட்டத்தை அமுல்படுத்துவதற்கு அல்ல என்பதை புரிந்துகொள்ள வேண்டும். சிறுபான்மை கட்சிகள் கையளித்த எந்த தீர்வு வரைபுகளையும் இந்த குழு கணக்கில் எடுக்க வில்லை என்பது வேதனைக்குரிய விடயமாகும். இதனால் தான் ஆரம்பத்தி லிருந்தே மேலக மக்கள் முன்னணி சர்வ கட்சி பிரதிநிதிகள் குழுவை நம்பவில்லை.

இன்றைய நிலையில் 13ஆவது அரசியல் அமைப்பு திருத்த சட்டத்தின் மூலமாக இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது. 2000ஆம் ஆண்டு சந்திரிகா அம்மையார் கொண்டுவந்த தீர்வு திட்டம் தந்தை செல்வா- டட்லி ஒப்பந்தம், தந்தை செல்வா- பண்டாரநாயக்க ஒப்பந்தம் இதை எல்லாவற்றையும் விட பின்னோக்கி செல்ல அரசாங்கம் முயல்கிறது. இனப்பிரச்சினை அடிப்படையில் இன்று ஏற்பட்டிருக்கும் யுத்தத்தின் மூலம் 60 ஆயிரத்திற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். பல இலட்சக்கணக்கானோர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இடம்பெயர்ந்துள்ள இன்றைய நிலையில் இனப்பிரச்சினைக்கு இப் படியான தீர்வு யானைப் பசிக்கு சோளப் பொரி போன்றதாகும். தமிழ் மக்கள் எதிர் பார்க்கும் சிறப்பான, கௌரவமான ஒரு தீர்வு திட்டத்தை அரசாங்கம் முன்வைக்குமேயானால் நாட்டு பிரிவினைவாத யுத்தத்திற்கு தமிழ் மக்கள் ஆதரவளிக்கமாட்டார்கள். மாறாக 1987இல் உருவான இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலமும் இந்திய அமைதிப்படை நினைவாக சிலை அமைப்பதன் மூலமாகவும் இந்தியாவை திருப்திப்படுத்தி இன்றைய யுத்தத்திற்கு இந்தியா அரசாங்கத்தின் உதவிகளை பெறுவதற்கு இலங்கை அரசாங்கம் முயல் வது தமிழ் மக்களுக்கு ஏமாற்றத்தையே அளிக்கின்றது.

இந்த விடயத்தில் எமது தந்தை நாடான இந்தியா அமைதி காப்பது மேலும் அச்சத்தை ஏற்படுத்துகின்றது. ஜனாதிபதி மன்மோகன் சிங் களத் தீவிரவாத கட்சிகளை திருப்திப்படுத்துவதை நிறுத்தி தமிழ் மக்களுக்கு நேர்மையான தீர்வு திட்டத்தை முன்வைக்கவேண்டும்.

50 வருட காலத்திற்கும் அதிகமாக புரையோடிப்போயிருக்கும் இனப் பிரச்சினைக்கு முற்றுமுழுதாக முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். யுத்தத்தை அடுத்த தளபதிக்கு விட்டு வைக்கப்போவதில்லை என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் இனப்பிரச்சினையையும் அடுத்ததலைமுறைக்கு விட்டு வைக்கக்கூடாது என்பதனையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்பது தமிழ் மக்களின் எதிர்பார்ப்பும் அபிலாஷையுமாகும். (அ-5)

# வெள்ளைவான் ஆயுததாரிகளை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வவுனியா நீதிவான் உத்தரவு

(வவுனியா)

கொலை மற்றும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தி வெள்ளைவான் ஆயுததாரிகளைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இராசேந்திரன்குளம் இராணுவ முகாம் தளபதிக்கு வவுனியா மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த டிசம்பர் மாத இறுதிப் பகுதியில் மரக்கடத்தலில் ஈடுபட்டதாகக் கூறப்படுகின்ற இரண்டு பேர் மற்றும் குடும்பஸ்தர் ஒருவரும் இராசேந்திரன்குளம் பகுதியில் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான கொலை வழக்கு விசாரணையில் சாட்சியாக நீதிமன்றத்தில் இராணுவ முகாம் தளபதி ஆஜராகியிருந்தபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொலைகள் சம்பந்தமான வழக்கு விசாரணையில் சாட்சியாக ஆஜராகுமாறு முன்னதாக நீதிமன்றம் இவருக்கு உத்தரவிட்டிருந்தது. எனினும் இவர் வவுனியா வீரபுரம் பகுதியில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் காயமடைந்து கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதனால் குறிப்பிட்ட திகதியில் இவரால் நீதிமன்றத்தில் ஆஜராக முடியவில்லை என இராணுவ தலைமைக்காரியாலயம் நீதி மன்றத்திற்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்திருந் தது.

சிசிக்சை பெற்றதன் பின்னர் கையில் காயத்திற்கான கட்டுடன் நீதிமன்றத்திற்கு இவர் வருகை தந்திருந்தார். குறிப்பிட்ட கொலைச் சம்பவங்கள் இடம்பெற்ற போது தனது இராணுவ முகாமில் இருந்து எவரும் செல்ல வில்லை என தனது சாட்சியத்தில் தெரிவித்தார்.

அத்துடன் மரக்கடத்தலில் ஈடுபடும் போட்டிக்குழுக்களிடையே மோதல் ஏற்பட்டதாக தனக்குத் தகவல் கிடைத்ததாகவும் அத்தகைய சம்பவமே நடைபெற்றிருக்கலாம் எனவும் இராசேந்திரன்குளம் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி தனது சாட்சியத்தில் தெரிவித்தார். இதனைப் பதிவு செய்த வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் மோதலில் ஈடுபடுகின்ற மரக்கடத்தல் குழுக்கள் இராணுவ சீருடையணிந்து ரி.56 ரகத் துப்பாக்கிகளுடன் செல்ல மாட்டார்கள் என சாட்சிக்குச் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் செக்கடிபிலவில் குடும்பஸ்தர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தின் போது சந்தேகநபர்கள் சரளமாக சிங்களத்தில் பேசியதாகவும் அவர் இராணுவ சீருடையில் இருந்ததாகவும் அவருடன் வந்திருந்தவர் தமிழில் சரளமாகப் பேசியவர் கட்டைக் காற்சட்டை அணிந்திருந்ததாகவும் அவர் கள் இருவருமே அந்த குடும்பஸ்தரைச் சுட் டுக் கொன்றதாகவும் ஏற்கனவே நீதிமன்றத் தில் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள என்றும் நீதிபதி கூறினார். எனவே சம்பவம் நடைபெற்றதன் பின்னர் எமக்குத் தெரியாது எனக் கூறுவது பொறுப்பு வாய்ந்த கட்டளைத் தளபதிக்கு அழகல்ல. குற்றவாளிகளைக் கைது செய்து மன்றில் ஆஜராக்குவதே கட்டளைத் தளபதியின் கடமையாகும் என குறிப்பிட்ட நீதிபதி , இராசேந்திரன் குளம் பிரதேசத்தில் ஆயுதபாணிகள் வெள்ளை வானில் மிகவும் சுதந்திரமாக நடமாடுவதாக மன்றுக்குத் தகவல் கிடைத்துள்ளது எனவும் இதனைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை இராணுவம் மேற்கொள்ள வேண்டும் எனவும் கூறினார்.

வவுனியாவில் அமைதியான சூழ்நிலை உள்ள போதிலும் இராசேந்திரன் குளம் கொலை மற்றும் குற்றச் செயல்கள் இடம் பெறும் இடமாகவுள்ளது. கொலை மற்றும் குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களைக் கைது செய்து பிரதேசத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்தி குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கும் விசேடமாக வெள்ளை வான் ஆயுததாரிகளை கைது செய் வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (அ-5)

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ்

கோயில் வழிபாடு மக்கள் மனத்தை பல்வேறு வழிகளில் பயன்படுத்தும் துன்பங்களை எதிர்கொள்ளவேண்டி நேரிடும் போது இறைவனைப்பற்றிய சிந்தனை மூலமே அமைதியடையலாம். மனித வாழ்க்கையில் நீண்ட காலமாகத் துன்பங்களை அனுபவிக்கும் போது வழிபாடுதான் மகிழ்வு தரும்.உள்ளத்தை வாட்டும் நினைவுகளை எல்லாம் இறைவனிடம் கூறுவதன் மூலம் ஆறுதல் பெறலாம். எமது குறைகளை சிலவேளைகளில் எம்மைச் சார்ந்தவர்களிடம் கூற்முடியாமல் இருக்கும். ஆனால் கோவிலுக்குச் சென்று இறைவனிடம் எல்லாவற்றையும் சொல்லி மனச் சுமையை குறைத்துக்கொள்ளலாம்.எமக்கு உகந்தவழியும் இதுவே.

இத்தகைய ஆற்றுப்படுத்தலை நாவுக்கரசர் தமது பாடல்கள் மூலமாகச் செய்துள்ளார். 81வயது வரை வாழ்ந்த அப்பர் வாழ்க்கையில் பல இன்னல்களை எதிர்கொண்டவர். அதனால் தன் பட்டறிவைப்பயன்படுத்திப் பிறரது துன்பங்களையும் தீர்க்க முயன்றுள்ளார்.

நாம் செய்த தீவினைகளால் துன்பங்களை அனுபவிக்க நேரிடும். எம்மை அயலவர் எல்லோரும் எள்ளி நகையாடுவர். எமது மனம் எரியில் வீழ்ந்தது போல துடிக்கும். இந்த அவல நிலைக்கு ஆளாகாமல் நாம் தப்பித்துக்கொள்வதற்கும் ஏற்றவழி ஒன்று உண்டு. அதை நாவுக்கரசர் செந்தமிழ் பாடல் ஒன்றிலே விளக்கிக் கூறியுள்ளார்.

அல்லலும் அருவினையும் தொல்லை வல்வினையும் என எம்மைத்தொடரும் வினைகளைப்போக்க தில்லைச் சிற்றம் பலத்துள் உறையும் சிவனை வழிபடுவது நல்லது. மனிதன் பிறரைப் பற்றி சிரித்துப்பேசும் குணமுடையவன். அப்பர் தன்னுடைய வாழ்வில் அத்தகைய அனுபவத்தைப்பெற்றவர். சைவ வாழ்வியலில் பல்வேறு துன்பங்களை அனுபவித்த போது அதனின்றும் விடுபடச் சமண சமயத்தை சார்ந்து நின்றவர். பின்னர் மீண்டும் சைவ சமயத்தை நாடி வந்தவர். அப்பருடைய சமய மாற்றம் பலர் சிரித்துப் பேசுவதற்கு இடமளித்திருந்தது. அது அவருடைய மனத்தை பெரிதும் பாதித்திருந்தது. தன்னைப்போல பிறரும் துன்புறக்கூடாது என அப்பர் எண்ணினார்.பிறருடைய பழிப்பிலிருந்து மீள்வதற்கு கோயில் வழிபாடுதான் உறுதுணையானது. மனத்தை புண்படுத்தும் பிறருடைய பேச்சுக்களை "சிரிச்சுற்று" பேசுதல் என அப்பர் குறிப்பிடுகிறார்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

வாழ்க்கையில் அவர் பெற்ற துன்பியல் அனுபவங்கள் அவருடைய தமிழ்ப்புலமையால் பாடல்களிலே ஆவணமாய் உள்ளன. அயலவர் குணவியல்பை ஒருவர் நன்கறிந்திருக்க வேண்டும். அவர்களுடைய பேச்சுகள் மனத்தைப்புண்படுத்தினால் அத்துன்பத்திலிருந்து எம்மை காத்துக்கொள்வதற்கு அப்பர் காட்டும் நன்னறிப்பாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

"அரிச்சுற்ற வினையாலடர் புண்டு நீர்
எரிச் சுற்றக் கிடந்தாரென்றயலவர்
சிரிச்சுற்றுப் பல பேசப்படா முனந்
திருச்சிற்றம்பலஞ் சென்றடைந்துய்ம் மினே"

## பத்தும் விமன 2008 இன்று ஆரம்ப வைபவம்

(யாழ்ப்பாணம்)

ஹற்றன் நஷனல் வங்கியின் பத்தும் விமன 2008 அதிர்ஷ்டசாலிகளைத் தேர்ந்தெடுக்கும் சேமிப்புக் கணக்கின் ஆரம்ப வைபவம் இன்று காலை சுன்னாகம் ஹற்றன் நஷனல் வங்கியின் முகாமையாளர் ச.சுந்தரேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இச் சேமிப்புக் கணக்கு நாடு பூராகவும் அறிமுகப்படுத்தப்படுவதனையடுத்து சுன்னாகத்தில் இன்று வைபவ ரீதியாகச் சேமிப்புக் கணக்கு ஆரம்பிக்கப்படவுள்ளதாக முகாமையாளர் தெரிவித்தார். (ச-5)

## அனைத்துக் கட்சிக் குழுவின் யோசனைக்கு இந்திய அரசாங்கம் ஆதரவு தெரிவிப்பு

அதிகாரப்பரவலாக்கல் மூலம் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியாக அரசால் அமைக்கப்பட்ட அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு இடைக்காலப் பரிந்துரைகளை அளித்திருப்பதற்கு இந்தியா வரவேற்பு தெரிவித்திருக்கிறது.

இது தொடர்பாக நேற்று செய்தியாளர்களிடம் பேசிய இந்தியா வெளியுறவுத் துறையின் செய்தித்தொடர்பாளர் நவ்தேஜ் சர்னா, இலங்கை அரசியல் அமைப்பு சட்டத்திலுள்ள அதிகாரப் பகிர்வு வழிமுறைகள் மற்றும் ஆட்சி மொழி வழிமுறைகள் தொடர்பாக 'அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு அளித்திருக்கும் இடைக்காலப் பரிந்துரைகள் தொடர்பாக இலங்கை அரசு இந்தியாவிடம் தெளிவுபடுத்தியிருக்கின்றது.

இலங்கையிலுள்ள பிரச்சினைகளுக்கு இலங்கை மக்கள்தான் தீர்வு காண வேண்டும் என்பது இந்தியாவின் நிலைப்பாடாக இருந்து வருகின்றது. அந்தத் தீர்வு ஒன்றுபட்ட இலங்கைக்குள் அனைத்துச் சமூகத்தினரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும் என்றார் நவ்தேஜ் சர்னா. (ச-5)

## வடக்கு...

ஒன்றும் நிறுவப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதியான ஜே.ஆர். ஜெயவர்த்தன , பிரேமதாச, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோர் போல் அன்று, சகல கட்சிகளையும் இணைத்துக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட சர்வகட்சி ஆலோசனைக் குழுவின் இடைக்கால அறிக்கை கிடைக்கப் பெற்றுள்ளமை வரலாற்று வெற்றியாகும்.

வடக்கில் ஏற்படுத்தப்படும் இடைக்கால சபைக்கான ஆலோசனை சபைக்கான உறுப்பினர்கள் ஜனாதிபதியினாலேயே நியமிக்கப்படுவர். முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவினால் ஏற்படுத்தப்பட்டதையே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் முன்னெடுப்பதாக ஐக்கிய தேசியக்கட்சி குற்றஞ்சாட்டுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் ஏற்படுத்தப்பட்ட மாகாண சபை கதிரையில் வரதராஜப்பெருமாளினால் அமரமுடியாத நிலை தோற்றுவிக்கப்பட்டது. அரசாங்கத்திற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லை என்பதனால் அரசியலமைப்பில் சீர்திருத்தத்தை மேற்கொள் வதற்கு நாம் முயற்சிகளை மேற்கொள்ள வில்லை சர்வ கட்சி ஆலோசனை குழுவில் ஐக்கிய தேசியக் கட்சியும் தொடர்ந்து கலந்து கொண்டிருந்தால் பெரும்பான்மையுடன் அரசியலமைப்பில் திருத்தங்களை ஏற்படுத்தியிருப்போம்.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் அதிகாரத்தை பகிர்வதன் மூலமாக பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும் என்ற சிறிலங்கா சுதந்திர கட்சியின் கொள்கையின் பிரகாரம் பல்வேறான விமர்சனங்கள் மற்றும் நெருக்கடிகளுக்கு மத்தியில் 13-வது அரசியலமைப்பை தேசிய, சர்வதேச ஆதரவுடன் முன்னெடுப்போம் என்றார். (எ-1)

## புதைகுழியிலிருந்து 16 சடலங்...

ஹெப்பிட்டிக்கொல்லாவப் பிரதேசத்தில் உள்ள கிரிபத்கொட என்ற இடத்தில் புதைகுழியில் இருந்து 16 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. ம்ண்குவியல் ஒன்றில் கைஒன்றைக் கண்ட பொதுமக்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதையடுத்து அநுராதபுரம் நீதிவான் சிவந்த மஞ்சநாயக்கா உடன் சம்பவ இடத்திற்குச்சென்ற பொலிஸார் அவரின் முன்னிலையில் கை காணப்பட்ட இடத்தைத் தோண்டினர். இதன்போது 10 சடலங்கள் மீட்கப்பட்டன. இதனையடுத்து அதற்கு அருகில் சந்தேகத்திற்கிடமான காணப்பட்ட இடத்தைத் தோண்டியபோது மேலும் ஆறு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட 16 சடலங்களும் ஆண்களினுடையவை எனத் தெரிவிக்கப்பட்டது. இதே வேளை முதலில் மீட்கப்பட்ட 10 சடலங்கள் கடந்த 2 நாள்களுக்கு முன்னரும் மற்றைய இடத்தில் தோண்டப்பட்ட 6 சடலங்களும் ஒரு வார காலத்திற்கு முன்னரும் புதைக்கப்பட்டிருக்கலாம்எனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இவர்கள் எவ்வாறு இறந்தனர் என்பது குறித்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். அத்துடன் மீட்கப்பட்ட சடலங்களில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்படுவதாகவும் கூறப்பட்டது. சடலங்கள் மீட்கப்பட்ட இடங்களைச் சூழவுள்ள பகுதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை மீட்கப்பட்ட உடல்கள் எத்தனை என்று உறுதியாகக் கூறமுடியாததுடன் எத்தனை உடல்கள் இருந்தது என்பது குறித்துப் பல்வேறு தகவல்கள்,வதந்திகள் இருப்பதாகவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

மேலும் சடலங்கள் மீட்கப்பட்ட இடம் காட்டில் உள்ளது. இதற்கு அண்மையில் உள்ள பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். எனினும் நேற்று இருட்டி விட்டதன் காரணமாக இன்று விரிவான விசாரணைகள் மேற்கொள்வர் என்று இராணுவப் பேச்சாளர் நேற்றிரவு தெரிவித்தார். (ச-2,5)

## யாழ்ப்பாண...

குருநகர், நாவாந்துறை, கொட்டடி மற்றும் கொழும்புத்துறைப் பிரதேச ங்களில் நடமாடும் மருத்துவ சேவைகள் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் கூறினார்.

**கல்வி**

கிராமப் புறங்களில் வசதி குறைந்த மாணவர்களின் விபரங்களை வழங்கினால் அவர்களுக்கு யுனிசெவ்வின் உதவியுடன் அப்பியாசக் கொப்பிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

**போக்குவரத்து**

வெளிமாவட்டங்களுக்குச் செல்வதற்கென இராணுவத்தினரால் வழங்கப்படும் பாதுகாப்பு அனுமதி மூன்று மாதங்களுக்குச் செல்லுபடி ஆகும். மீண்டும் தேவைப்பட்டால் சிவில் அலுவலகத்தில் அதனைப் புதுப்பிக்க முடியும். அவசர தேவைக்காகப் பயணத்தை மேற்கொள்வோர் முறைப்படி விண்ணப்பத்தைப் பூரணப்படுத்தி யாழ்.சிவில் நிர்வாகக் காரியாலயத்தில் சமர்ப்பித்தால் தாமதமின்றி அனுமதியைப் பெற வசதி செய்யப்படும் என அவர் உறுதியளித்தார். (அ)


முக்கிய அறிவித்தல்

கிருஷ்ணா அடகு கடை

370, கே.கே.எஸ். வீதி,

யாழ்ப்பாணம்.

T.P. 222 5046 பதிவு இல. J/DS/BR/472

மேலே குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2006 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு (2006.12.31) முன்னர் அடகு வைத்து மீட்கப்படாத அடகு நகைகள் யாவற்றையும் 2008 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதிக்கு (2008.02.28) முன்பு வட்டியைச் செலுத்திப் புதுப்பித்துக் கொள்ளவும்.

தவறின் 28 ஆம் திகதி பெப்ரவரி மாதம் 2008 ஆம் ஆண்டு (28.02.2008) அன்று விற்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

370, K.K.S. Road, Jaffna.

A.S.சுரேந்திரன் உரிமையாளர்

(c-738)



Microsoft Certified Systems Engineer

We are now Launch on Windows Vista

யாழ்ப்பாணத்தில் பரீட்சைகள்

புதிய பிரிவுகள் ஆரம்பம்

26.01.2008 07 a.m.

- குறுகியகால நிறைவான வகுப்புக்கள்
- Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் சான்றிதழ்
- Network Manager, System Admin., System Engineer போன்ற வேலைவாய்ப்பு
- வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்

மாணவர் விருப்பிற்கு மேலதிக வகுப்பு நேரங்கள்

பதிவு செய்வோருக்கு விசேட சலுகைகள் விபரங்கள் நேரில்

324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்

MCS Supported By UNDP/JRRP

(829)



NEW MICRO COMPUTER SYSTEMS

NEW BATCH START ON: 26/01/2008, 03/02/2008

O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான விசேட பிரிவு.

சங்கானையில்........!

கணினிக் கல்வி பெற மாணவர்களின் சிறந்த தெரிவு!

- Dip. in Microsoft Office
- Dip. in Desktop Publishing
- Dip. in Software Engineering
- Dip. in Hardware Engineering
- Dip. in Video Mixing
- Dip. in Computer Accounting
- Dip. in Internet & E-Mail



NEW MICRO COMPUTER SYSTEMS

Main Street, Chankanai. Phone : 021-4590042



கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 12.06.1974 மறைவு 22.01.2008



அமரர் செல்வராசா துளசிதாசன்

(கேபிள் T.V. உரிமையாளர், யாழ்ப்பாணம்.)

நாவலர் மடம், கரவெட்டி, நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வராசா துளசிதாசன் (கேபிள் T.V உரிமையாளர், யாழ்ப்பாணம்) 22.01.2008 (செவ்வாய்க்கிழமை) மரணமடைந்ததையிட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும்அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

Jaffna Technical Institute ஸ்ரீராம் எலெக்ரோனிக்ஸ்

நஷனல் எலெக்ரோனிக்ஸ்

(834)



துளிர்கள் நிறுவனத்தின் உளசமூக கற்கைநெறி

டிப்ளோமா சான்றிதழ்

பயிற்சிப் பிரிவு : 05

பயிற்சிக் காலம் : 12 மாதங்கள்

தகமை : G.C.E O/L, சமூக சேவையில் ஈடுபாடு

விரிவுரைகள் : சனி, ஞாயிறு, போயா தினங்கள்

ஆர்வமுள்ள இருபாலாரும் 02-02-2008 முன் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.

அரச ஊழியர்களும், ஆசிரியர்களும் இக்கற்கைநெறியைத் தொடரலாம்.

வயது உங்களுக்கு பிரச்சினையல்ல!

இல.47, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்.

இயக்குனர், துளிர்கள்.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.8 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தல் 25.01.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.